விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 83 | வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 26 வெள்ளிக்கிழமை (12.10.2012) | பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்
அணி திரள்வோம்

# இந்தியா பொறுமை காத்து வருகிறதாம்

## புதுடில்லியில் வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஸ்ணாவைச் சந்தித்த பின் சம்பந்தன் கூறினார்



இலங்கைப் பிரச்சனையில் இந்தியா பொறுமை காத்து வருவதாகவும், அந்தப் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தங்களிடம் தெரிவித்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் தெரிவித்தார்.

இந்திய அரசின் அழைப்பின் பேரில், சம்பந்தன் தலைமையில் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், விநாயகமூர்த்தி, செல்வராசா உட்பட ஏழு பேர் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழு புதுடெல்லி சென்றுள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பு குழு நேற்றுக் காலை வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவைச் சந்தித்து ஒரு மணி நேரத்துக்கும் மேலாக ஆலோசனை நடத்தியது.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சம்பந்தன், அந்தச் சந்திப்பு திருப்திகரமாக அமைந்ததாக தெரிவித்தார். இந்தியாவின் நிலைப்பாடு மற்றும் இந்திய அரசின் சார்பில் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் குறித்து கிருஷ்ணா விளக்கியதாகவும், தங்களது முயற்சிகள் தாங்கள் எதிர் பார்த்த விதத்தில் நேற்றுவரை பலனளிக்கவில்லை என்று அவர் தெரிவித்ததாகவும் சம்பந்தன் கூறினார்.

தாங்கள் பொறுமை காத்து வருவதாகவும், "அந்தப் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு" என்று கிருஷ்ணா கூறியதாகவும் சம்பந்தன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான, தங்கள் தரப்பு முயற்சிகளையும், கருத்துக்களையும் கிருஷ்ணாவிடம் எடுத்துரைத்ததாக சம்பந்தன் கூறினார்.

தமது மக்கள் ஏமாற்றப்படுவதை ஏற்க முடியாது என்றும் நியாயமான அரசியல் தீர்வு காண்பதற்கு எல்லோரும் ஒத்துழைத்து, அந்தத் தீர்வைக் காணலாம் என்றால், அந்தப் பாதையில் செல்வதற்குத் தயார் என்றும் சம்பந்தர் கூறினார்.

இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசு பிரேரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் பொறுத்தவரை, அதில் தமிழ்க் கூட்டமைப்பு இடம் பெற வேண்டும் என்று இந்திய அரசின் சார்பில் வலியுறுத்தப்படவில்லை என்று தெரிவித்த சம்பந்தன், அதே நேரத்தில் அதில் சேர மாட்டோம் என்று தாங்களும் கூறவில்லை என்றும் தெரிவித்தார்.

அரசு தரப்பில் தங்களுக்கு உறுதியளிக்கப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் செயல்படுவதாக இருந்தால் ஒரு நியாயமான அரசியல் தீர்வை ஏற்படுத்தக் கூடிய செயல் திட்டத்துடன் அதை ஆராயத் தயார் என்றும், ஆனால் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் செல்ல தாங்கள் தயாராக இல்லை என்றும் சம்பந்தர் தெளிவுபடுத்தினார்.

"தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அரசுக்கு ஏற்கெனவே தெரிவித்திருந்த போதிலும் அரசு இதுவரை அதற்கு பதில் தரவில்லை.

## யாழ். சிங்கள மகா வித்தியாலயக் காணியில் இராணுவ முகாம் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சிங்கள மகா வித்தியாலய காணியில் படைமுகாமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கையினை படைத்தரப்பு மேற்கொண்டு வருகின்றது.

யாழ். கொழும்புத்துறை பகுதியில் சுமார் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள படைமுகாமை அங்கிருந்து அகற்றி அக்காணியை பொதுமக்களிடம் கையளிப்பதற்காகவே மேற்படி சிங்கள மகா வித்தியாலயம் இருந்த காணியில் படை முகாம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வனிகசூரிய தெரிவித்தார்.

கொழும்புத்துறை இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான 45 வீடுகள் காணப்படுவதாகவும் அவற்றை உரிமையாளர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார்.

போர் நடைபெற்ற காரணத்தால் சிங்கள மகா வித்தியாலயம் நீண்டகாலமாக இயங்காமல் உள்ளது. இந்நிலையிலேயே குறித்த பகுதியில்

02

## கிளிநொச்சியில் குண்டுவெடிப்பு, ஒருவர் காயம்

வன்னேரிக்குளப் பகுதியில் இராணுவத்தினரால் புதைக்கப்பட்டதாக நம்பப்படும் குண்டென்று வெடித்ததில் ஒருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

நேற்று காலை 8.00 மணியளவில், மோட்டார் சைக்கிள் ஒன்றில் வீதியைக் கடக்க முயன்றபோதே இவ்வெடிபொருள் வெடித்துள்ளது.

02

## விரிவுரையாளர்களின் 99 நாள் போராட்டம் முடிவு

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கடந்த 99 நாட்களாக நடத்திவந்த போராட்டம் முடிவுக்கு வந்து விட்டதாக விரிவுரையாளர் சங்க முக்கியஸ்தரான பேராசிரியர் ரேகான் மதுஜித் குறிப்பிட்டார். பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நேற்று இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாகவும் பேராசிரியர் மதுஜித் கூறினார். இதற்கிணங்க இன்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வேலைக்குத் திரும்புவார்கள் என்றும் அவர் கூறினார்.

## அவுஸ்திரேலியா தப்பிச் செல்ல முற்பட்ட 112 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குச் செல்ல முற்பட்ட 112 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் கோசள வர்ண குளசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று (11) அதிகாலை சிலாபம் கடற்பரப்பில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் மோதறைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். மேலதிக வழசாரணைகளுக்காக இவர்களை குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

## தனியார் தொலைத்தொடர்பு கோபுர வளாகத்தில் தீ!

யாழ். சட்டநாதர் கோயிலுக்கு அருகிலுள்ள தனியார் தொலைத் தொடர்பு கோபுர வளாகத்திலுள்ள மின்னிணைப்பில் நேற்று வியாழக்கிழமை பகல் 2 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மின்னொழுக்கு காரணமாகவே இத்தீ விபத்து ஏற்பட்டதாக யாழ். மாநகரசபையின் தீயணைப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாநகரசபையின் தீயணைப்பு பிரி வினருக்கு அறிவிக்கப்பட்டதைய டுத்து, சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

## இலங்கை பற்றிய இரகசிய கோவைகளை இந்தியா நீக்க திட்டம்

இலங்கை உட்பட பல நாடுகள் தொடர்பான கோவைகளை இரகசியப்பட்டியலிலிருந்து நீக்கும் வேலைகள் நடப்பதாக இந்திய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளதாக பி.ரி.ஐ. சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே 70, 000 கோவைகளை இரகசியப்பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது. இந்நிலையில், இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட கோவைகளை இரகசிய பட்டியலில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பூட்டான், பாகிஸ்தான், ஈரான், இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், யூரேஷியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா நாடுகள் தொடர்பான கோவைகளை இரகசியப்பட்டியலிலிருந்து நீக்கும் பெரியதொரு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் விசேட செயலாளர் பினக் சக்ரவர்த்தி தெரிவித்துள்ளார்.

02

## வெளிநாடுகளில் உள்ள இலங்கை பிரஜைகள் வாக்காளர்களாக பதியலாம்

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் எதிர்வரும் ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் உறவினர்கள் ஊடாக வாக்காளர் இடாப்பில் வாக்காளர்களாக பதிவினை மேற்கொள்ளலாம் என யாழ். உதவி தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்ய விரும்பவர்கள் இலங்கை குடியுரிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

"2012ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த திருத்தத்தின் போது இரட்டை பதிவு மேற்கொண்டிருந்த 6, 500 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இதனால் இறுதி ப் பட்டியல் தயாரிப்பில் பல இடர்பாடுகள் உள்ளன.

"2012ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சேர்க்கப்பட வேண்டியவர்கள் சேர்க்கப்பட்டும் நீக்கப்பட வேண்டியவர்கள் நீக்கப்பட்டும் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலகங்களில் மக்களின் பார்வைக்கு காட்சிப்

02

# மனித உரிமைகள் ஆணைக்குழு கிளிநொச்சி மக்கள் சந்திப்பில் 12 உரிமை மீறல் முறைப்பாடு

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து ஆண் பிள்ளைகள் காணாமல் போயுள்ளதாக அவர்களின் பெற்றோர்கள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அவர்களின் பெற்றோரால் நேற்று முன்தினம் புதன்கிழமை முறையிட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடமாடும் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொதுமக்கள் சந்திப்பு பிரதி புதன்கிழமைகளில் நடைபெறுகின்றது.

இந்த சந்திப்பில் 12 முறைப்பாடுகள் அன்றைய தினம் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதில் ஐந்து முறைப்பாடுகள் கடந்த 2009 ஆம் ஆண்டில் யுத்தம் நடைபற்ற காலப் பகுதியில் காணாமல் போயுள்ளவர்கள் பற்றிய தாகும்.

இவர்கள் பற்றிய எந்த தகவலும் கிடைக்கவில்லை. எங்கள் பிள்ளைகள் இருக்கின்றார்களா ? இல்லையா ? என யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு பதில் சொல்ல வேண்டும் என உருக்கமான முறையில் முறையிட்டுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

# அவுஸ்திரேலியா செல்ல முயற்சி வத்தளையில் 13 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முயற்சித்த 13 பேர் வத்தளை - ஹெந்தல பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வான் ஒன்றில் நீர்கொழும்பு நோக்கிச் சென்ற போதே நேற்றுமுன்தினம் (11) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, நீர்கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்டோர் மேலதிக விசாரணைகளுக்கென வத்தளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# கொழும்புக்கு ஆடுகளை ஏற்றிவந்த வான் சிக்கியது

தலவாக்கலையிலிருந்து கொழும்புக்கு சட்டவிரோதமாக ஆடுகளைக் கொண்டு சென்ற வான் ஒன்றினை பத்தனை பொலிஸார் கொட்டகலை நகரில் வைத்து நேற்றிரவு கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் கொட்டகலை நகரில் ரோந்து சென்ற பத்தனை பொலிஸார் சந்தேகத்துக்கிடமான வகையில் தலவாக்கலைப் பகுதியிலிருந்து ஹட்டன் நோக்கிச் சென்ற வான் ஒன்றை வழிமறித்து சோதனையிட்ட போது அந்த வானின் உள்ளே 28 ஆடுகள் இருந்துள்ளன.

இந்த ஆடுகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதி பத்திரம் இல்லாத காரணத்தினால் வானின் சாரதியையும் உதவியாளரையும் விசாரணக்கு உட்படுத்திய பொலிஸார் ஆடுகளையும் வானையும் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர்களையும் ஆடுகள் மற்றும் வானையும் ஹட்டன் நீதி மன்றில் இன்று ஆஜர் படுத்த வதற்கு பத்தனை பொலிஸார் நட வடிக்கை எடுத்துள்ளனர்.

## வெளிநாடு.(தொடர்)

படுத்தப்பட்டுள்ளது.

இதில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக நேரடியாக பொது மக்கள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க முடியும்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மஞ்சுள மீதான தாக்குதல், சர்வதேச நீதித்துறை வல்லுனர்கள் கண்டனம்

இலங்கை நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண ஆயுததாரிகளால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உறுதியான நடவடிக்கைகளை எடுத்து இலங்கை அரசு நீதியை நிலை நாட்ட வேண்டும்'' என்று சர்வேதேச நீதித்துறை வல்லுநர்கள் அமைப்பு கூறியுள்ளது.

மஞ்சுளா திலகரத்தன மீதான தாக்குதல் நீதித்துறையின் சுதந்திரத்தை குறைக்கும் நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகும் என்று சர்வதேச நீதித்துறை வல்லுனர்கள் அமைப்பின் ஆசிய இயக்குனர் சாம் ஜாப்ரி தெரிவத்துள்ளார்.

நாட்டில் உள்ள நீதிபதிகள் பாதுகாப்பாகவும், அச்சுறுத்தலுக்கு ஆளாகாமலும் பணியாற்றக்கூடிய ஒரு சூழலை அரசு உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

செப்டம்பர் மாதத் தொடக்கத்தில் இலங்கைத் தலைமை நீதிபதி மற்றும் நீதிச் சேவை ஆணைக் குழுவைச் சேர்ந்த இரு உறுப்பினர்களையும் சந்திக்க வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திவி நெகும சட்ட மூலத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து தலைமை நீதியரசரையும், நீதிச் சேவை ஆணைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கின்ற இரண்டு மூத்த நீதியரசர்களையும் அரச ஊடகங்கள் மோசமாக சித்தரித்துவந்த விடயமும் இந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள் ளது.

மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு சுயாதீன மான ஒரு நீதி அமைப்புத் தேவை என்று கூறியுள்ள ஜாப்ரி, அரச ஊடகம் மூலமாக நீதிபதிகளுக்கு மிரட்டல் விடுப்பது நீதித்துறையின் சுதந்திரத்தையும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பாதிக்கும் என்று கூறியுள்ளார்.

# இலங்கைத் தமிழர்கள் தமிழகம் வந்தால் அகதிகளாக நடத்தக் கூடாது

## அதிதிகளாக நடத்த வேண்டு என்கிறார் பேரரசர் வைரமுத்து

ஈழத்திலிருந்து ஏதிலிகளாக வந்துள்ள தமிழர்களை அகதிகளாக நடத்த வேண்டாம்... அதிதிகளாக அதாவது விருந்தாளிகளாக நடத்த வேண்டும், என்றார் கவிஞர் வைரமுத்து.


இலங்கை அகதிகளின் அவலங்களைப் பின்னணியாகக் கொண்டு இயக்குநர் சீனு ராமசாமி உருவாக்கியுள்ள புதிய படம் நீர்ப்பறவை.

இப்படத்தில் தமிழக மீனவர்களின் பிரச்சினைகளை இலங்கை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இப்படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் மாலை நடந்தது.

படத்தின் முழுப் பாடல்களையும் எழுதியிருக்கும் கவிஞர் வைரமுத்து விழாவில் பேசுகையில், "இந்த படம் ஒரு முக்கியமான விஷயத்தைத் தொட்டுப்போகிறது.

இலங்கை கடலுக்குள் படகுக்குள் சுடப்பட்டுக் கிடந்த ஒரு உடலுக்கு பக்கத்தில் வீறிட்டுக் கிடக்கிற ஒரு சிறுவன் கடலிலேயே அனாதையாகிறான். பின்னர் அவன் தமிழ்நாட்டுக்கரையில் வளர்கிறான். இதுதான் கதை.

இப்படத்திற்கு நான் எழுதியிருக்கும் பாடலில், "மழைச்சொட்டு மண்ணில் விழுந்தால் மண்ணகம் அதை மறுப்பதில்லை இன்னொரு மனிதன் உள்ளவரைக்கும் இங்கு யாரும் அகதியில்லை," என்று கூறியுள்ளேன்.



தமிழ்நாட்டு அரசாங்கமாகட்டும், தொண்டு நிறுவனங்களாகட்டும், தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களாகட்டும், இலங்கையில் இருந்து அகதிகளாக வருவோரை அகதிகளாக வந்தார்கள் என்று சொல்லவேண்டாம்... இடம்பெயர்ந்தவர்கள் என்று சொல்லுங்கள்.

அகதி என்ற வார்த்தைக்கும் அதிதி என்ற வார்த்தைக்கும் மிக மெல்லிய ஒலி வேறுபாடு உண்டு. அகதி என்றால் ஏதுமற்றவர். அதிதி என்றால் விருந்தாளி. நாம் அவர்களை விருந்தாளிகளாக நடத்த வேண்டும். திரும்பிப் போய்விடுபவர்கள் அவர்கள்.

எனவே இந்திய எல்லைக்குள் வரும் இலங்கைத் தமிழர்களை அகதிகளாக நடத்தக்கூடாது. அவர்களை அதிதிகளாக அதாவது விருந்தாளிகளாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# முன்னேஸ்வரம் சிவன் கோவிலில் கோபுரம் அமைக்க ஜாதிக உறுமய தடை

## - தலைமை பூசாரி தகவல்

சிலாபம் முன்னேஸ்வரத்திலுள்ள சிவன் கோவிலுக்கு ராஜகோபுரம் அமைக்க தாம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஜாதிக ஹெல உருமய கட்சி தடையாக இருப்பதாக அக்கோயிலின் தர்மகர்த்தாவும் தலைமைப் பூசாரியுமான பத்மநாப குருக்கள் குற்றம்சாட்டியுள்ளார்.

ராஜகோபுரம் அமைப்பதற்காக அனுமதி கேட்டு மாதம்பை பிரதேச செயலகத்திலே கடந்த மே மாதமே தாங்கள் விண்ணப்பித்து விட்டாலும் இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ராஜகோபுரம் அமைப்பதற்கான திட்டமிடலில் தாம் ஈடுபட்டபோது, அந்த இடத்தில் சந்தன வட்டக் கல் ஒன்று கிடைத்துள்ளது, இது பௌத்த மத சாயல் கொண்டுள்ளது என்று தொல்லியல் துறையினர் கூறியதாக பூசாரி தெரிவி த்தார்.

கோயில் வளாகத்தில் இருக்கின்ற அரச மரம் பௌத்தர்களுக்கு புனிதமான மரம் என்றும் ஆதலால் ராஜகோபுரத்துக்கான அஸ்திவாரத்தை அவ்விடத்தில் அமைக்க முடியாது என அப்பகுதியைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் திட்டவட்டமாகக் கூறியிருந்ததாகவும் பத்மநாப குருக்கள் குறிப்பிட்டார்.

ராஜகோபுரத்துக்கான அஸ்திவாரப் பணிகள் நடந்த நிலையில், இது பௌத்த தொல்லியல் பகுதி என்று பிக்குமார் கூறிவருவது தமக்கு கலக்கத்தைத் தருவதாக அவர் கூறினார்.

ஹெல உருமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மேதானந்த தேரர் இந்தக் கோயில் பகுதிக்கு வந்து பார்த்துவிட்டு, இது பௌத்த புனித பிரதேசம் என்று பத்திரிகைகளுக்கு பேட்டியளித்துவருவது தமக்கு வருத்தம் தருவதாக அவர் குறிப்பிட் டார்.

நல்ல விநாயகர் ஆலயம் அமைந்திருந்த இடம் பிக்குமார் தங்கிய பிரதேசம் என்றும், செட்டிமார் மடம் பௌத்த ஆறாமைகள் என்றும், திருக்குளம் அமைந்திருக்கின்ற இடம் பௌத்த சைத்தியம் அமைந்திருந்த இடம் என்றும் அவர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருவதாக பத்மநாப குருக்கள் கூறினார்.

ராஜகோபுரம் பதினொரு தளங்களைக் கொண்டு அமையும் என்று தாங்கள் குறிப்பிட்டிருந்த நிலையில், மூன்று மாடிக் கட்டடங்கள் வரைதான் பிரதேச சபை அனுமதியளிக்க முடியும், அதனிலும் உயரமான கட்டிடங்களுக்கு மாகாண தலைமைப் பொறியாளரின் அனுமதி வேண்டும் என தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ராஜகோபுரம் என்பது மக்கள் வாழப்போகும் ஒரு கட்டிடம் அல்ல ஆகவே இந்த விதி கோபுரத்துக்குப் பொருந்தாது என பத்மநாப குருக்கள் சுட்டிக்காட்டினார்.

## கிளிநொ..(தொடர்)

இதன்போது குறித்த மோட்டார் சைக்கிள் கடுமையாகச் சேதமடைந்ததோடு மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கை... (தொடர்)

அணு தொழில்நுட்பம் மற்றும் அணுவாயுதக் கட்டுப்பாடு தொடர்பான சர்வதேச மாநாடொன்றில் பேசியபோது அவர் இதனைக் கூறினார். உலகிலுள்ள அணுவாயுதங்கள் யாவும் அழிக்கப்படும்வ்ரை பாதுகாப்புக்காக அணுவாயுதங்களை வைத்திருக்கும் உரிமை இந்தியாவுக்கு உண்டெனவும் அவர் கூறினார்

## யாழ். சிங்கள மகா...(தொடர்)

இராணுவ முகாம் அமைப்பதற்கான நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது என்று கூறப்படுகிறது.

இந்தப் பாடசாலை அமைந்துள்ள காணியின் ஒரு பகுதி மாத்திரமே அரசாங்கத்துக்குச் சொந்தமானதெனவும் ஏனைய பகுதி தனியாருக்குச் சொந்தமானது என்றும் 1960ஆம் ஆண்டு கல்வித் தேவைக்கான சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் தனியாருக்குச் சொந்தமான ஏனைய பகுதியும் அரசாங்கத்துக்கு சொந்தமாக்கப்பட்டதாகவும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

என்ன தேவைக்காக காணி சுவீகரிக்கப்பட்டதோ அந்த தேவையைத் தவிர்ந்த வேறு தேவைகளுக்காகக் காணியைப் பயன்படுத்த முடியாது என்று காணி சுவிகரிப்புச் சட்டம் தெரிவிப்பதாகவும் சட்டத்திற்கு முரணான வகையில் இராணுவத்தினர் குறித்த பாடசாலைக் காணியில் படைமுகாம் அமைப்பதற்கு வழங்குமாறு கோரியுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்குரிய முன்னேற்பாடாக இராணுவத்தின் 63ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை குறித்த பாடசாலை வளாகத்தில் மரநடுகைத் திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளாதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், படைமுகாம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் 17ஆம் திகதி இதற்குரிய அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெறவுள்ளதாகவும் 51ஆவது படைப்பிரிவின் தளபதி மரநடுகை நிகழ்வின் போது ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

## சர்வதேச அஞ்சல் தினம்:

# வடமாகாண நிகழ்வுகளை மன்னாரில் நடத்த ஏற்பாடு

சர்வதேச அஞ்சல் தினைத்தை முன்னிட்டு வடமாகாண நிகழ்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி மன்னாரில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச அஞ்சல் தினமான 9 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் நிகழ்வுகள் இடம்பெற்றாலும் வடமாகாண நிகழ்வுகள் மன்னாரில் மிகவும் கோலாகலமாக கொண்டாடப்படவுள்ளது.

அதன் போது அஞ்சல் தினத்தை முன்னிட்டு இலங்கை ரீதியானவும் வடமாகாண ரீதியிலும் வெற்றி பெற்ற தபாலகங்கள், தபால் ஊழியர்கள், மற்றும் கட்டுரை, சித்திரப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர் ஆகியோருக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அதன்படி 3 இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் அதே நேரம் 10 ஆறுதல் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் வடமாகாணத்தில் இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தபாலக ஊழியர்களது பிள்ளைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பிள்ளைகளும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அதன்படி மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்திற்கான புள்ளிகள் என்ற வீதம் தெரிவு செய்யப்பட்டு 5 மாவட்டங்களில் இருந்தும் 15 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் தபாலகங்க ஊழியர்களது 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளில் ஒக்டோபர் 9ஆம் திகதி பிறந்த பிள்ளைகளும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை பாடசாலை மாணவர்களினால் சேகரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட முத்திரைகளும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

## இந்திய அரசின் நிதியுதவியில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

இந்திய அரசின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தினால் வட பகுதியில் இடம்பெயர்ந்தவர்களுக்கான 10,000 துவிச்சக்கர வண்டிகள் விநியோகத்தின் ஒரு கட்டமாக வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளை கையளிக்கும் நிகழ்வு வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ். மோகநாதன், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் உயரதிகாரி தட்சணாமூர்த்தி வவுனியா ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பல பகுதிகளுக்கு வாகன போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படாமையால் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்த நிலையிலேயே துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றது.

இதன்போது பெரும் பாதிப்புக்குள்ளாகிய நிலையில் கல்வி மற்றும் பொருளாதார செயற்பாட்டில் இடர்பட்டுள்ளவர்களின் முன்னுரிமை அடிப்படையில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளைக்குப் பாராட்டு: இரு மறைமாவட்ட மேய்ப்புப்பணிச் சபைகள் இணைந்து ஏற்பாடு





கடந்த 29 வருடங்களாக திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்தை நல்ஆயனாக இருந்து வழிநடத்தி வந்ததுடன், திருகோணமலை மறைமாவட்டத்தைத் தொடர்ந்து வழிநடாத்திச் செல்லவிருக்கும் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையை வாழ்த்தி கௌரவிக்கும் முகமாக கல்முனை, மட்டக்களப்பு மறைக்கோட்ட மேய்ப்புப்பணிச் சபைகள் இணைந்து சிறப்பு நிகழ்வொன்றினை தன்னாமுனை, மியானி மண்டபத்தில் கடந்த 6ஆம் 'திகதி அன்று நடாத்தினர்.

இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதர சகோதரிகள் அரச உயர் அதிகாரிகள், பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகள், இரு மறைக்கோட்டங்களுக்குட்பட்ட பணித்தளங்களில் செயற்படும் பங்கு மேய்ப்புப்பணிச்சபை, பக்திச் சபைகளின் பிரதிநிதிகள், இறைமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

ஆயர் அவர்கட்கு பொன்னாடை போர்த்தியும், நினைவுப் பரிசுகள் வழங்கியும், வாழ்த்துப்பா இசைத்தும் தங்கள் நன்றியுணர்வை வெளிப்படுத்தினர்.

மேலும், ஆயர் அவர்களின் பணிக்காலத்தில் யுத்த சூழ்நிலை, சூறாவளி, சுனாமி, பாரிய வெள்ள அனர்த்தங்களின்போதும் முகம் கொடுத்து மக்களுக்கு அரும்பணியாற்றியது பற்றியும், இன, மத வேறுபாடின்றி மக்களுக்கு அவரது பணி இருந்தது எனவும் உரை வழங்கியவர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மறைமாவட்ட புதிய ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகையும் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வினை மேலும் சிறப்பிக்கும்வண்ணம் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இறுதியில் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் நன்றியுரையும் இடம்பெற்றது.

## இ.போ.ச.வுக்கு அடுத்த வருடம் 1000 பஸ்கள்

சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய எண்ணியுள்ள 3000 பஸ்களில் 1000 பஸ்கள் அடுத்த வருட ஆரம்பத்தில் இலங்கை போக்குவரத்து சபை சேவையில் ஈடுபடுத்தப்படும் என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

வலுவான போக்குவரத்து சேவை ஒன்றை வழங்கும் நோக்கில் சீனாவில் இருந்து 3000 பஸ்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பேருவளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

பஸ் இறக்குமதி குறித்து தனியார் பஸ்கள் எவ்வித அழுத்தங்கள், அச்சுறுத்தல்களை விடுத்தாலும் அவை அனைத்துக்கும் முகங்கொடுக்கத் தயார் என அமைச்சர் தெரிவித்தார்.

## விசமிகளால் பாகற் கொடிகளுக்குச் சேதம்

ஆவரங்கால் கிழக்கு செம்பியன் திடல் பகுதியில் அமைந்துள்ள விவசாய நிலத்தில் பயிரிடப்பட்டு விளைச்சலுக்குத் தயார் நிலையில் இருந்த சுமார் 150 பாகற் கன்றுகள் இனந்தெரியாத விசமிகளால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

ஆவரங்கால் கிழக்கு நவோதயா வீதிப் பகுதியில் வசித்து வரும் குணம் எனும் விவசாயியினால் செம்பியன் திடல் பகுதியில் சுமார் ஒன்றரைப் பரப்பு விவசாய நிலத்தில் 150 பாகற் கன்றுகள் நாட்டப்பட்டு மிகவும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வந்த வேளையில், அவை விளைச்சலுக்குத் தயாராக இருந்த நிலையில் இரு தினங்களிற்கு முன்னர் இரவு வேளையில் இவ் விளை நிலப்பகுதிக்குள் நுழைந்த விசமிகள் அங்கிருந்த அனைத்துப் பாகல் கன்றுகளையும் பிடுங்கி எறிந்தும், வெட்டியும் முற்றாக நாசப்படுத்தியுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற மறு நாள் காலை தோட்ட உரிமையாளருக்கு அயலவர்களால் விடயம் தெரிவிக்கப்பட்டு அவர் தோட்டத்திற்கு சென்றிருந்த வேளை அங்கு அனைத்துக் கன்றுகளும் வாடிய நிலையில் காணப்பட்டதைக் கண்டு மிகவும் ஆறாத்துயரத்துடன் அவர் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இவ்வாறு விசமிகளால் அழிக்கப்பட்ட பயிரினால் மேற்படி விவசாயிக்கு சுமார் 75 ஆயிரம் ரூபா வரை நட்டம் ஏற் பட்டிருப்பதாவும் ஏனைய விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## இன்றைய இராசி பலன் (12.10.2012)

**நந்தன வருடம் புரட்டாதித் திங்கள் 26ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

நட்சத்திரம் : மகம் நண்பகல் 12.07 வரை அதன் பின் பூரம்
திதி : துவாதசி இரவு 10.53 வரை. அதன் பின் திரயோதசி
சுபநேரம் : 6.02 - 7.32
இராகுகாலம் : 10.32 - 12.02
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : தொழில் சஞ்சலம், முயற்சியின் மேல் பலன், பணப் பிரச்சினை
**இடபம்** : மனக்கலக்கம், குறைகேட்டல், குடும்ப சுகக் குறைவு
**மிதுனம்** : பொருள் வரவு, தொழில் முன்னேற்றம், தெய்வ அனுகூலம்
**கடகம்** : வீண் செலவு, வாய்த்தர்க்கம், நம்பிக்கையீனம்
**சிங்கம்** : அதிக கோபம், வாக்குக் கலகம், உடற்காயம்
**கன்னி** : பொருள் இழப்பு, மன அமைதியின்மை, போசன சுகக் குறைவு
**துலாம்** : சுப செலவு, நினைத்தவை நிறைவேறல், திருமண முயற்சி
**விருச்சிகம்** : இடம்மாறுதல், தற்புகழ்ச்சி, மனமாற்றம்
**தனுசு** : தூரதேச நற்செய்தி, எதிர்பாராத சந்திப்பு, தந்தை வழி உயர்வு
**மகரம்** : தொழில் உற்சாகம், உல்லாசப் பயணம், மேலதிகாரி பாராட்டு
**கும்பம்** : கைப்பொருள் செலவு, பிறர்க்கு உதவி, குறைகேட்டல்
**மீனம்** : வீண் முயற்சி, மனஸ்தாபம், கடன்படல்

- ஜோதிடர் பாலா.இரத்தினசேகர்

# சிவில் பாதுகாப்புப் படையில் முன்னாள் போராளிகள் இணைக்கப்பட்டமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார் சங்கரி

கடந்த காலத்தைப் போல உணவுப் பங்கீட்டுப் புத்தகத்தை வழங்கி, அதன் மூலம் ஏழைகள் அனைவரும் ஒரு நாளைக்கு ஒரு பொழுதாவது நிறைவாக உண்ண வழிவகுக்குமா தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, ஜனாதிபதிக்கு எழுதிய நீண்ட கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். யுத்தப் பாதிப்புக்குள்ளான தமிழ் மக்கள் தொடர்பாகக் திரு.ஆனந்தசங்கரி எழு திய கடிதத்தில் "அப்பாவித் தமிழ் இளைஞர்களுக்குப் புலி முத்திரை குத்தியவர்களை ஆண்டவன் தண்டிப்பார்" என்றும் தெரிவித்துள்ளார்.

"அப்பாவி இளைஞர்களுக்கு புலிகளென முத்திரை குத்துவதற்குப் பொறுப்பான அதிகாரிகள் ஆண்டவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள். புலி இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் 2500 பேரை சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மூலமாகத் தேர்ந்தெடுத்து பல்வேறு உப கொடுப்பனவுகளுடன் கூடிய நல்ல வேதனம் கொடுப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தில் ஆனந்தசங்கரி அவர்கள் குறிப்பிட்டிருக்கும் ஏனைய விடயங்கள் வருமாறு:

இது ஒரு நல்ல முயற்சியாக இருந்தபோதிலும் இந்த இளைஞர் யுவதிகளில் அனேகர் புலிகளால் பலாத்காரமாக அவர்களின் இயக்கத்தில் சேர்க்கப்பட்டவர்கள் இவர்கள். பாடசாலைகளில் பயின்று கொண்டிருந்தவர்கள். நன்கு படிக்கக்கூடியவர்களாவர்.

யுத்த முடிவில் யுத்த முனையிலும் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் இராணுவ அதிகாரிகளின் சிறுவிசாரணையின் பின் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற வார்த்தையை நம்பி சரணடைந்தவர்களாவர்.

புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டவர்களில் ஆகவே 2500 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்தமை ஒன்றுமில்லாத நிலையிலும் பார்க்க மேலானது.

இதுவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் பரிதாபகரமான நிலையாகும். பல தலைமுறைகளாகச் சேகரித்து வைத்திருந்த அத்தனை சொத்துக்களையும் இழந்து இரவோடு இரவாகப் பிச்சைக்காரர்களாக ஆக்கப்பட்டவர்கள்.

எதுவுமின்றி புதிதாக வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. இடம்பெயர்ந்தோர் முகாம்களில் அவர்களுக்குக் கிடைக்கப் பெற்றவை பானை, சட்டி, துவாய், சாரம், நுளம்பு வலை போன்றவை மட்டுமே! சில தகரங்களும், சில மரத்துண்டுகளும் குடிசைகள் அமைப்பதற்கு வழங்கப்பட்டன. யுத்தம் முடிந்து 3 வருடங்களின் பின்பும்கூட பாதகமான சுவாத்தியமற்ற சூழ்நிலையால் அவர்களால் பாதிக்கப்படுகிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கோப்பாப்புலவில் மனிக் முகாம் மூடப்பட்டு அங்கிருந்த



175 குடும்பங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மக்கள் அவசர அவசரமாக கொண்டுவந்து பெரும்பகுதி காடாக இருக்கும் யாரோ ஒருவருக்குச் சொந்தமான காணிக்குள் குவிக்கப்பட்டுள்ளனர்.

கறையான் புற்றுக்கள் நிறைந்த, பாம்புகள் குடியிருக்கும் பாதுகாப்பற்ற இடமாகும். இவர்களை அங்கே குவிப்பதற்கு சிலமணி நேரங்களுக்கு முன்பே அக்காடுகள் புல்டோசரினால் துப்புரவு செய்யப்பட்டது. ஜனாதிபதி அவர்கள் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் என்னவெனில் இராணுவத்தினர் பெற்றிருந்த நற்பெயர் கோப்பாப்புலவுடன் அற்றுப் போய் விட்டது.

இவை தவிர அதிகாரபூர்வமான 90000 இற்கும் மேற்பட்ட விதவைகள் 1000 இற்கும் மேற்பட்ட அநாதைகளும் ஆதரவற்றவர்களும் உள்ளனர் என நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது. மேலும் முகாம்களிலிருந்த பத்துக்கு ஒருவர் அங்கவீனர்களாக இருந்தார்கள். அனேகர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டால் உயிருக்கு ஆபத்து ஏற்படுமென்ற காரணத்தால் அந்த ஷெல் துண்டுகளை உடலில் சுமந்தபடி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களால் எந்த வேலையும் செய்யமுடியாது. இத்தகையோருக்கு அரசாங்கம் என்னத்தைச் செய்திருக்கிறது? பாடசாலைகளுக்குப் போகாமல் வேலை வாய்ப்பு எதுவித வருமானமோ இன்றி வாழும் இளைஞர்களால் என்ன செய்ய முடியும்? கிளி-நொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் மட்டும் வாழும் இளைஞர்களைத் திருப்திப்படுத்துவதால் எதுவித பலனுமில்லை. அது யாருக்கும் மகிழ்ச்சி தராது.

இருக்கின்ற பிரச்சினையை ஒன்றாக எடுத்து, எந்த அபிவிருத்தி வேலைகளையும் செய்வதற்கு முன்பு மக்களின் பசியை இல்லாது செய்யுங்கள். கிளிநொச்சியில் விளையாட்டு மைதானம் யார் கேட்டார்கள்? கச்சேரிக்கோ பொலிஸ் நிலையத்திற்கோ புதிய கட்டடம் தேவை என்று எவரும் அலுத்துக் கொள்ளவில்லை. மக்கள் பசியால் வாடுகிறார்கள். முதல் அவர்களுக்கு உணவு அளியுங்கள். அதுதான் உங்களுடைய முதற்கடமையாகும்.

அவர்களுக்குத்தான் வீடு தேவை. இராணுவத்திற்கு அல்ல. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டாம் என்று நான் கூற வரவில்லை. மத்திய கிழக்கு, கொரியா, இத்தாலி போன்ற நாடுகளில் 15,000 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். புனர்வாழ்வு அளிக்கப்பட்ட இளைஞர்களோ அன்றி வடக்கு கிழக்கு இளைஞர்களோ, வெளிநாட்டில் எத்தனைபேர் வேலைவாய்ப்புப் பெற்றனர்?

கிளிநொச்சி முல்லைத்தீவு இளைஞர்கள் மீது நீங்கள் கொண்டுள்ள அன்பை நான் நன்றாக விளங்கிக்கொண்டேன். அதை நான் பாராட்டவும் விரும் புகின்றேன். கிழக்கை மறந்து விடாதீர்கள்.

அங்கேயும் நிலைமை சிறப்பாக இல்லை. கிழக்கில் இந்த வகையைச் சேர்ந்த ஒரு இளைஞனுக்கேனும் இந்தத் திணைக்களத்தில் வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை.

இந்நியமனங்கள் முறைப்படி செய்யப்படாமையினால் இந்நியமனங்களை எவரும் குழப்பாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஆகவே தயவுசெய்து இவ்விளைஞர்களின் வேலைக்கு உத்தரவாதத்தை உறுதிப்படுத்துங்கள்.

இந்தத் தீமைகள் எல்லாவற்றுக்கும் நான் தங்களுக்கு கூறக் கூடிய ஆலோசனை தயவுசெய்து கடந்த காலத்தைப் போல உணவுப் பங்கீட்டுப் புத்தகத்தை வழங்கி அதன்மூலம் ஏழைகள் அனை வரும் ஒரு நாளைக்கு ஓர் பொழுதாவது நிறைவாக உண்ண வழி வகுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

# திவிநெகும சட்ட மூலத்துக்கு எதிராக மற்றொரு மனு

'திவிநெகும' சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என்பதற்கு பதினொரு காரணங்களைக் குறிப்பிட்டுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சாமர மத்துமகளுகே, அச் சட்ட மூலம் அரசியலமைப்புக்கு முரணானது என்று உயர் நீதி மன்றம் அறிவிக்க வேண்டும் எனக் கோரி மனுவொன்றைத் தாக்கல் செய்தார். தனது மனுவில் சட்டமா அதிபரை பிரதிவாதியாகவும் அவர் குறிப்பிட்டே உயர்நீதிமன்றில் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

# சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டும்:

## சோபித தேரர்

நாட்டின் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட தற்போதுள்ள ஜனாதிபதி முறைமை உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தைச் சேர்ந்த மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

நீதித்துறை, அதன் சுயாதீனத்தை இழந்துவிட்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினால் மக்கள் ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

மக்கள் நீதித்துறையின் மீது நம்பிக்கை இழந்துள்ளனர்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரான மஞ்சுள திலகரத்ன மீதான தாக்குதல் ஒரு தனியார் மீதான தாக்குதல் அல்ல. இது முழு சட்ட சமுதாயத்தின் மீதான தாக்குதல் என சட்டத்தரணி ரவி கருணாரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி நீதித்துறைக்கோ நாடாளுமன்றத்துக்கோ மக்ளுக்கோ பொறுப்புக்கூற வேண்டியதில்லை.

எனவே சட்டம் ஒழுங்கை பேண வேண்டுமாயின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக் கப்பட வேண்டும் என அவர் கூறினார்.

தேர்தல்கள், ஊடகங்கள் மற்றும் அரசாங்கம் என்பவற்றில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினரான எல்மோ பெரேரா கூறினார்.

# அதிபர்களின் வேதனங்களில் மாற்றமிருக்காதென அமைச்சர் உறுதி

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் தெரிவிப்பு

நாட்டின் சகல பாகங்களிலும் தற்போது அதிபர் நியமனம் கிடைக்கப்பெற்ற அனைவருக்கும் வேதன முரண்பாடு இருக்காது எனப் பிரதிக் கல்விப் அமைச்சர் திரு.டி.எம். விஜிதமுனி சொய்சா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் விசேட சந்திப்பில் பிரதி அமைச்சர் இதனைத் தெளிவுபடுத்தினார்.

சகல தரங்களிலும் அதிபர் நியமனம் கிடைக்கப்பெற்றவர்கள் தாம் பதவி வகித்த ஆசிரியர் கடமையில் கிடைக்கப்பெற்ற வேதனத்தைவிட குறைவான வேதனம் விங்கப்படமாட்டாது எனவும் அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் உறுதியளித்தார்.

ஆசிரியர் தரத்தில் கூடுதலான வேதனம் பெற்றவர்கள் அதிபர் தரம் பெற்று குறைவான வேதனத்தை பெறவேண்டியேற்படும் என்பதனைச் சுட்டிக்காட்டிய வேளை அவ்வாறு கூடிய வேதனத் தில் இருப்பவர்களை எவ்வகை யிலும் குறைந்தவேதனக் கட மைக்கு நியமிக்க முடியாதென் றும் அவர்கள் பெற்றுக் கொண்ட வேதனம் முழுமையாக கிடைக்குமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# பெரும்போக செய்கையை தீர்மானிக்கும் கூட்டம்

தொடர்ந்து நீர் தேக்கங்களுக்கு நீர் கிடைக்காமை காரணமாக எதிர்வரும் பெரும்போக செய்கையைத் தீர்மானிக்கின்ற கூட்டத்தை இதுவரை நடத்தமுடியாத நிலை எற்பட்டுள்ளதாக நீர்பாசனத் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

முன்னைய வருடங்களில் இந்த காலப்பகுதிக்குள் பெரும்போக செய்கையைத் தீர்மானிப்பதற்கான கூட்டத்தை நடத்தி முடிக்கக் கூடிய வாய்ப்பு கிட்டியிருக்கும் என்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பத்ரா கமநலதாச தெரிவித்தார்.

தற்போதைய மழைவீழ்ச்சி நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வதற்கு போதுமானதாக இல்லையென தெரிவிக்கப்படுகிறது.

# வைரக்கல்லை விழுங்கிய சீனப் பிரஜை நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டார்

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இரத்தினக்கற்கள் மற்றும் நகைகள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த 18 இலட்சம் ரூபா பெறுமதியான வைரக் கல்லை திருடியதான குற்றச் சாட்டை சீனப்பிரஜை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து அவரை ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இரு சரீரப்பிணையில் விடுதலை செய்ய கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதவான் கனிஷ்க விஜேரத்ன உத்தரவிட்டார்.

ஹைனை சன்லி டொன்ஜில் எனும் மேற்படி சீனப் பிரஜையின் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சியாளர் கணிசமான தொகைப் பணத்தை செலுத்த தயாராக இருப்பதாகவும் ஆனால், அத்தொகையை ஒரே தடவையில் செலுத்த இயலாதவராக உள்ளார் எனவும் கூறினார்.

இதனையடுத்து, சந்தேகநபரின் விரலடையாளத்தைப் பெறும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதவான், எதிர்வரும் 22ஆம் திகதி இவ்வழக்குக்கான தீர்ப்பை வழங்குவதாக குறிப்பிட்டார்.

நீதிச் சேவை ஆணைக்குழு செயலாளர் தாக்குதல் சம்பவம் :

# சந்தேகநபரின் மாதிரி உருவ வரைபடம் வெளியிடப்பட்டது

நீதித்துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள சம்பவம் தொடர்பில் தேடப்படும் சந்தேகநபரின் மாதிரி உருவை ஒத்த வரைந்த உருவப்படம் ஒன்றை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன மீது அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதுதொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் நீதித்துறை சார்ந்த அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துவந்தன.

இந்நிலையில் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சந்தேகநபரின் மாதிரி உருவப்படத்தை ஒத்த உருவப்படத்தை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

குறித்த மாதிரி உருவத்தைக் கொண்ட சந்தேகநபர் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு குற்றத்தடுப்பு பிரிவினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேல்மாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் - 0777 755 950 கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தலைவர் - 0717 774 400, 0112 662 323 கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அத்தியட்சகர் - 0777 661 137, 0112 662 322 கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அலுவலக அதிகாரி - 0714 060 906, 0112 662 311.

இதேவேளை,

இலங்கை நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண ஆயுததாரிகளால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உறுதியான நடவடிக்கைகளை எடுத்து இலங்கை அரசு நீதியை நிலை நாட்ட வேண்டும் என்று சர்வேதேச நீதித்துறை வல்லுனர்கள் அமைப்பு கூறியுள்ளது.

மஞ்சுளா திலகரத்ண மீதான தாக்குதல் நீதித்துறையின் சுதந்திரத்தை குறைக்கும் நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகும் என்று சர்வதேச நீதித்துறை வல்லுனர்கள் அமைப்பின் ஆசிய இயக்குனர் சாம் ஜாப்ரி தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள நீதிபதிகள் பாதுகாப்பாகவும், அச்சுறுத்தலுக்கு ஆளாகாமலும் பணியாற்றக்கூடிய ஒரு சூழலை அரசு உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை, மஞ்சுள திலகரட்ணவைத் தாக்கியவர்களைக் கைதுசெய்ய இலங்கை அதிகாரிகள் தவறிவருவதாக இலங்கை சட்டவாதிகள் சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

கொழும்பு உயர்நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் இக்குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

அரசாங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கும் நோக்கிலேயே மஞ்சுள திலகரட்ண தாக்கப்பட்டார் என்று அமைச்சர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என இக்கூட்டத்தில் ஜனநாயகத்தைக் காப்பதற்கான சட்டத்தரணிகள் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நீதிச்சேவைகள் ஆணைய செயலாளரைத் தாக்கியவர்களை அரசாங்கம் உடனடியாக கைதுசெய்ய வேண்டும். அதைச் செய்ய முடியாவிட்டால் பாதுகாப்பு படையினரால் என்ன பயன் என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

# மத்திய மாகாண ஆளுநர் விசனம்

மத்திய மாகாணத்தில் சில அரச அலுவலகங்களில் பணியாற்றும் அரச ஊழியர்களின் செயற்பாடுகள் குறித்து மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ விசனம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் நேற்று முன்தினம் (10) மாலை திடீரென மாகாண சபைக்குச் சொந்தமான அலுவலகங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

கண்டி மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்திற்கு அவர் விஜயம் செய்த போது அதன் ஊழியர்கள் மாலை 3.15 மணிக்கே வீட்டுக்குச் செல்ல புறப்பட்ட வண்ணம் இருந்துள்ளனர்.

அத்துடன் அலுவலக பிரதானிகள் இருவர் நேற்று அலுவலகத்தில் இருக்காமை குறித்தும் மத்திய மாகாண சுகாதார அதிகாரி மற்றும் மத்திய மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் ஆளுநர் தொலைபேசி ஊடாக முறையிட்டார்.

# போதையில் விஷம் அருந்தியவர் மரணம்

மது போதையில் குடும்பத்தாருடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக மனமுடைந்த குடும்பஸ்தர் ஒருவர் போதை தலைக்கேறிய நிலையில் விவசாய செய்கைக்குப் பயன்படுத்தும் கிருமி நாசினியை அருந்தி உயிரிழந்துள்ளதாக யாழ். மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த செல்வரெத்தினம் ராசகுலேந்திரன் (வயது 66) என்பவரே மரணமடைந்தவராவார்.

மரணமடைந்தவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வாய்க்கால் துப்பரவுப்பணி

மன்னார் கட்டுக்கரைக் குளத்திற்கு மழைநீரை சேகரிக்கும் முகமாக அக்குளத்திற்குச் செல்லும் பிரதான வாய்க்காலை துப்பரவு செய்யும் பணியினை நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் மழைநீர் வாய்க்கால் வழியாக தங்குதடையின்றி கட்டுக்கரைக்குளத்தை சென்றடையுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடும் வரட்சியைத் தொடர்ந்து கட்டுக்கரை குளம் மற்றும் அணைத்து சிறு குளங்களும் வற்றிய நிலையில் காணப்பட்டன.

இதேவேளை,

மேற்படி பகுதியில் காணப்பட்ட வடிகால் சீரின்மை காரணமாக மழை காலமத்திலும் வெள்ளப் பெருக்கு காணப்பட்டு வந்தது இதனால் மக்களும் வீதிப் போக்குவரத்துப் பயணிகளும் பல்வேறு அசௌகரியங்களையும் அனுபவித்து வந்தனர். குறிப்பாக வீடுகளுக்குள்ளும் பொதுநிறுவனங்களுக்குள்ளும் புகும் வெள்ளத்தினால் மழைகாலங்களில் இப்பகுதியில் பல்வேறு பிரச்சினைகள் நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது. இதனை கருத்திற் கொண்டே மேற்படி வாய்க்கால் துப்பரவுப் பணி மேற்கொள்ளப்படுகின் றது.

# சர்வதேசத்தையும், புலம்பெயர் தமிழரையும் நம்பியிருந்த புலிகள்

## எரிக் சொல்ஹெய்ம் கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்

சர்வதேச விவகாரம் தொடர்பில் விடுதலைப் புலிகளின் அறிவு சூன்யத்தை அண்மித்த நிலையில் காணப்பட்டது என நோர்வேயின் முன்னாள் அமைச்சரும், இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

நோர்வேக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரம் பற்றிய புரிதல் பூஜ்ஜியத்தை அண்மித்ததாகும் என சொல்ஹெய்ம் தெரிவித்திருந்தார்.

நோர்வேக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன், எரிக் சொல்ஹெய்மிற்கும் இடையிலான சந்திப்பின் போது, சொல்ஹெய்ம் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

யுத்தம் நிறைவடையும் வரையில் நோர்வே அரசாங்கம் விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமையுடன் தொடர்புகளைப் பேணி வந்ததாகத் தெரிவித்திருந்தார்.

எனினும், 2006ம் ஆண்டின் பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுடன் தொலைபேசி மூலமே தொடர்புகளைப் பேணியதாகக் குறிப்பிட்டிருந்தார். சர்வதேச சமூகம் அல்லது புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களைப் பிரயோகிப்பார்கள் என விடுதலைப் புலிகள் திட மாக நம்பியிருந்தனர் என குறிப்பிட்டிருந்தார்.

2009ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நோர்வேக்கான அமெரிக்கத் தூதுவர் க்ளைண்ட் வில்லியம்ஸ்சனும், எரிக் சொல்ஹெய்மும் இலங்கை விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். மே மாதம் 17, 18ம் திகதிகளில் நோர்வே அரசாங்கம் விடுதலைப் புலிகளின் சிரேஸ்ட தலைவர்களுடன் தொடர்புகளைப் பேணியதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சரணடைவது தொடர்பில் புலிகளின் அரசியல் மற்றும் இராணுவத் தளபதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிவித்திருந்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அல்லது ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊடாக சரணடைய புலிகள் விரும்பியதாகக் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இறுதிக் கட்ட யுத்தம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் குறித்த வலயத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமோ அல்லது ஐக்கிய நாடுகள் அமைப்போ பிரசன்னமாகியிருக்கவில்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்த விதம் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளது என அவர் குறிப்பிட்டதாக, அமெரிக்கத் தூதரகம் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

# ஹிரிப்பிட்டியில் பாரிய நீரூற்று கண்டுபிடிக்கப்பட்டது



நிமிடத்துக்கு 4000 லீற்றர் நீரை வெளித்தள்ளும் பாரிய நீர் ஊற்று ஒன்றை புவிச்சரிதவியலாளர்கள் ஹிரிப்பிட்டிய பிரதேசத்தில் கண்டுபிடித்துள்ளனர்.

217 அடி ஆழத்திலிருந்து பெரியதோர் கற்பாறையை துளைத்தபோதே இந்த நிலக்கீழ் ஊற்று வெளிப்பட்டுள்ளது.

இந்த ஊற்றிலிருந்து 20 அடி உயரத்துக்கு நீர் சீறியடிக்கின்றது. இவ்வாறானதொரு ஊற்று கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதற்தடவை யாகும்.

மேற்படி நீரை பரிசோதித்ததன் பின்னரே அது குடிப்பதற்கு உகந்ததா? இல்லையா? ஏன தீர்மானிக்க முடியும் என்று சிரேஷ்ட புவிச் சரிதவியலாளரான உபுல் விக்ரமரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சியான வறட்சியினால் உண்டான நீர்த் தட்டுப்பாட்டினால் வருந்திய மக்கள் இதை ஒரு வரப்பிரசாதமாகக் கருதுகின்றனர்.

# பிரிட்டனில் இலங்கைத் தமிழர் வீட்டில் கொள்ளை: 200 பவுண் நகை, பெருந்தொகை பணம் பறிபோனது

பிரித்தானியா, போலிங்கடன் பகுதியில் இலங்கைத் தமிழர் வீடொன்றில் பகல் பதினொரு மணிமுதல் ஒருமணிக்குள் உள்புகுந்த திருடர்கள் அங்கிருந்த இருநூறு பவுண் நகைகள் பதினெட்டாயிரம் பவுண்டுகள் பணம் என்பவற்றைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இச்சம்பவத்தின்போது ஆறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்ட இந்த பணத்தினையே குறித்த திருடர்கள் மோப்பம் பிடித்து கொள்ளையடித்துள்ளனர்.

அவ்வேளை வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து உட்புகுந்த திருடர்கள இந்த பட்டப் பகல் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியா செல்லும் முகமாக அவர்களது உறவினர்களும் குறித்த வீட்டில் பாதுகாப்புக்கு வைக்கப் பட்ட நகைகள் இணைந்து கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வர்த்தகராக விளங்கும் இவர்களது வீட்டில் நட்பு ரீதியாக உறவாடிய நபர்கள் சிலர் வழங்கிய தகவலின் அடிப்படை யிலேயே இந்த கொள்ளை இடம் பெற்றுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த நபர்கள் சந்தேகமடைந்த நபர் ஒருவரை பொலிசாருக்கு அடையாளப்படுத்திய நிலையில் கிட்டத்தட்ட திருடனை அவர்கள் நெருங்கி விட்டதாக அவர்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த திருடர்கள் கைது செய்யப்பட்டால் பலரது கொள்ளைகள் அம்பலத்துக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

ஒட்டுமொத்த இன்றைய நகைகளின் பெறுமதி எழுபதாயிரம் பவுண்டுகள் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த திருட்டின் பின்புலத்தில் தமிழர்கள் ஈடுபட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குற்றப்புலனாய்வுத் துறையினர் தமது நகர்வுகளை தீவிரமாக்கியுள்ளனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham

ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை

# 1956 - இது வெறும் தொலைபேசி இலக்கமல்ல

1956 - அரச நிறுவனங்களில் இடம்பெறும் மொழிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அரசகரும மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு அறிவிக்கவுள்ள தொலைபேசி இலக்கமே இதுவாகும். இந்த இலக்கத்தை பாவனைக்கு விடுவதற்கு மேற்படி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அதன் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க நிறுவனங்களில் சேவைகளைப் பெற்றுக் கொள்ளச் செல்லும் பொதுமக்கள், பிரச்சினைகளை எதிர்நோக்கும் போது மேற்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகள் செய்ய முடியுமென்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

1956 என்ற இந்த உத்தேச தொலைபேசி இலக்கம் இன்னும் பாவனைக்கு வரவில்லை என்று செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1956 என்ற தொலைபேசி இலக்கம் விரைவில் பாவனைக்கு வருகிறதோ, இல்லையோ, 1956ஆம் ஆண்டில்தான் இந்த நாட்டில் மொழிப்பிரச்சினை தோற்றுவிக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி தனிச்சிங்களச் சட்ட மசோதா பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அதே வருடம் ஜூன் மாதம் 15ஆம் திகதி தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவித்த தனிச்சிங்களச் சட்டம் 1956இல் கொண்டுவரப்பட்டதாலோ என்னவோ, ஒரு பிராயச்சித்த நடவடிக்கையாக 1956 என்ற இலக்கத்தை சமூக நல்லிணக்க அமைச்சு பயன்படுத்தத் தீர்மானித்ததோ தெரியவில்லை.

தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டு சுமார் 45 ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்டன. நாட்டில் கிட்டத்தட்ட 90ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிசார் சேவையில் உள்ளனர். இவர்களில் தமிழ் தெரிந்த பொலிசாரின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கூடத் தாண்டாது. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு பொலிசாருக்கே உண்டு. 90 சதவிகிதத்துக்கும் அதிகமான தமிழ் மக்களையே கொண்டது யாழ் குடாநாடு. இங்குள்ள யாழ்ப்பாணம், சுன்னாகம், கோப்பாய் ஆகிய பொலிஸ் நிலையங்களில் தமிழ் மக்கள் தமது சொந்த மொழியில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யக்கூடிய வசதிகள் இன்னமும் இல்லை என்பது வேதனைக்குரியது.

அரச கரும மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு என்பது இடதுசாரி அரசியல் பிரமுகரான வாசுதேவ நாணயக்காரவின் பொறுப்பிலுள்ளது. உண்மையான இடதுசாரிகள் இனபேதம் பார்ப்பதில்லை; இனபேதம் பார்க்கவும் கூடாது. வாசுதேவ, நேர்மையான இடதுசாரி என்பதில் எமக்கு இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.

திவிநெகும சட்டமூலம் பற்றி சகல தரப்பினரும் வாய் கிழியக் கத்துகிறார்களே, சாதாரண தமிழ் மகனுக்கு திவிநெகும என்றால் புரியுமா? வாழ்வின் எழுச்சி என்ற அற்புதமான தமிழ் இருக்கிறது. அதற்காக நல்லிணக்க அமைச்சினை மட்டும் குறை சொல்லிப் பயனில்லை. அனைத்து தமிழ் ஊடகங்களுமே "திவிநெகும" என்றுதான் குறிப்பிடுகின்றன. அதற்கு ஒரு சரியான தமிழ் பிரயோகத்தை பயன்படுத்தத் தவறுவது பாரிய குற்றமாகும்.

சமூக நல்லிணக்க அமைச்சு தனக்கு இருக்கக்கூடிய பாரிய பொறுப்புகளை புரிந்துகொள்ள வேண்டும். எடுத்ததற்கெல்லாம் போதிய தமிழ் மொழிபெயர்ப்பாளர் இல்லையென்று கூறுவது வெறும் சப்பைக்கட்டுவாதமாகவே முடியும். "கொவிசெத"., "சனிதா வாசனா", சங்வர்தன லொத்தரய" போன்ற சிங்களச் சொற்களே அப்படியே சந்தைக்கு வருகிறது. இதை வெளியிடுவது தேசிய லொத்தர் சபை. இது ஓர் அரசாங்க நிறுவனம். இவற்றையெல்லாம் மொழி பெயர்ப்பதற்கு மொழி பெயர்ப்பாளர்கள் இல்லையென்று வரட்டுக் காரணங்களைக் கூறமுடியுமா?

இந்த நாட்டில் நிலவிய அப்பட்டமான பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தின் ஒரு வெளிப்பாடாகவே சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட வேண்டுமென்ற யோசனையை முதன்முதலில் முன்வைத்தவர் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன. இதன் பின்னர் 1950களின் மத்திய பகுதியில் இந்த நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் சிங்களம் மட்டும் சட்டத்தை பற்றிப் பிடித்துக்கொண்டு கூக்குரலிட்டன. பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான ஒரு தந்திரமாகவே இது முன்வைக்கப்பட்டது. ஆட்சிக்கு வந்தால் சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டுவருவேன் என்றது ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தரான ஜே.ஆர். ஜெயவர்த்தனா கூறினார். ஆட்சிக்கு வந்து 24 மணித்தியாலங்களுக்குள் சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டுவருவேன் என்று அடித்துக் கூறினார் சுதந்திரக் கட்சியின் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா.

1956 ஏற்படுத்திய அவலங்களைத் தீர்ப்பதற்கு 1956 என்ற இந்த நல்லிணக்க அமைச்சின் விசேட தொலைபேசி இலக்கம் உதவுமா? பார்ப்போம்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# இலங்கையில் பல்கலைக் கழகக் கல்வியின் வளர்ச்சி


1942ஆம் ஆண்டில் முதலாவது இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட முன்னர் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியும் ஒரு மருத்துவக் கல்லூரியும் உயர்கல்வி நிறுவனங்களாக விளங்கி வந்தன. இவை அனைத்தும் இணைக்கப்பட்ட நிலையிலேயே முதலாவது பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சியின் கீழிருந்த இந்தியாவில் 19ஆம் நூற்றாண்டிலேயே மூன்று பல்கலைக்கழகங்கள் (பம்பாய், கல்கத்தா, சென்னை) தோற்றுவிக்கப்பட்டன. ஆனால், இலங்கையில் மிகத் தாமதமாகவே (1942இல்) முதலாவது பல்கலைக்கழகம் இங்கு தோற்றுவிக்கப்பட்டது. குடியேற்ற ஆட்சியாளர்கள் தமது தாய்நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கிக் கல்விக் கொள்கைகளை வகுத்தமையால், அவர்கள் இலங்கையர்களின் உயர்கல்வியில் அக்கறை கொள்ள வேண்டிய அவசியமிருக்கவில்லை. அவ்வாட்சியாளர்களின் தேவைகளுக்கு அவர்கள் ஏற்படுத்தியிருந்த ஆங்கிலப் பாடசாலைகளே போதுமானதாக இருந்தது. அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றத் தேவையான ஆங்கில அறிவுடையவர்களை அப்பாடசாலைகள் வழங்கின. அத்துடன் முதலாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில், பல்கலைக்கழகத்தை அமைக்கும் சிந்தனையில் ஈடுபடும் நிலையில் ஆங்கில ஆட்சியாளர்கள் இருக்கவில்லை.

1942இல் அமைக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகம் இன்று 15இற்கு மேற்பட்ட பல்கலைக்கழங்களாக வளர்ச்சி பெற்றுள்ளது. இவ்வளர்ச்சி நிச்சயமாகப் போதுமானதன்று. 1942 முதல் அரசாங்கம் தொடர்ச்சியாகப் பல்கலைக்கழகக் கல்வியில் தனது ஏகபோக உரிமையை விட்டுக் கொடுக்க விரும்பவல்லை. இந்தியா, மலேசியா, தாய்லாந்து. சிங்கப்பூர் முதலிய நாடுகள், மற்றும் உலகளாவிய போக்குகளுடன் இணைந்து செல்லாது, பல்கலைக்கழகக் கல்வியில் தனது ஏகபோக உரிமையை இலங்கை அரசு பேணி வந்துள்ளது.

பொ.அருணாசலம் அவர்களின் தலைமையில் 1906ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கம் நிறுவப்பட்டது. எனினும் முன்னர் இவர் பிரித்தானியப் பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெறுவதற்கு மாணவர்கள் ஆயத்தப்படுத்தப்படல் வேண்டும் என்றே விரும்பியிருந்தார்.

ஆரம்பத்தில் இலங்கையில் உயர்கல்வி லண்டன் பல்கலைக்கழகத்துடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான தொடர்பு "கீழைநாட்டு நாகரிகச் சார்பற்றதாய் பிரதானமாக மொழி விடயத்தில் (சிங்களம், தமிழ்) இருத்தலால், உள்ளூர் தேவைகளைப் பூர்த்தியாக்க வல்ல ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென அருணாசலமும் அவருடைய சகபாடிகளும் கேட்டனர். இத்தேசியவாதிகள் இலங்கைக்கான புதிய



1942இல் இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது பல்கலைக் கழகத்தின் வெளித் தோற்றம்

பல்கலைக்கழகமானது தேசிய மறுமலர்ச்சியின் ஒரு பிரதான அங்கமாகுமென வாதிட்டனர்.

1900ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக இயக்கம் வெளியிட்ட இலங்கைத் தேசிய சஞ்சிகையில் கீழைநாட்டு மொழிப் புலமையாளரும் கலாசார மறுமலர்ச்சிவாதியுமான ஆனந்தகுமாரசாமி இலங்கைப் பல்கலைக்கழகம் பற்றி வெளியிட்ட கருத்துக்களை இவ்விடத்து எடுத்துரைப்பது பொருத்தமானது. அதன்படி இப்பல்கலைக்கழகம் மக்களை ஆங்கிலமயமாக்கும் நிறுவனமாக அமைதல்கூடாது. மாறாக, கலாசாரத்தையும் சிந்தனைத் திறனையும் வளர்க்கும் நிறுவனமாக அமைதல் வேண்டும். இப்பல்கலைக்கழகம் கீழைத்தேச மொழிகளின் விருத்திக்காகத் தன்னை அர்ப்பணித்தல் வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார்.

உலகளாவிய ரீதியில், அரசாங்கங்கள் சுயமாகப் பல்கலைக்கழகக் கல்வியை விரிவுசெய்யும் அளவுக்குப் போதிய நிதி வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. இது செல்வந்த நாடுகளுக்கும் பொருந்தும். இதனால் தனியார்துறைப் பல்கலைகழகங்களுக்கு இடமளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசாங்கப் பல்கலைக்கழகங்களை மட்டுமே கொண்டிருந்த இந்தியா அண்மைக் காலங்களில் தனியார் பல்கலைக்கழகங்களுக்கும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் வளாகங்களுக்கும் இடமளித்தது. மலேசியாவில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து பல்கலைக்கழகங்கள் தமது வளாகங்களை அமைத்துள்ளன. சிங்கப்பூரும் தாய்லாந்தும் கூட இவ்வாறான வழிமுறைகளைக் கையாளுகின்றன. ஆனால், இலங்கையில் இவ்வாறான ஏற்பாடுகளுக்கு இடமில்லை.

இலங்கையின் பல்கலைக்கழக வளர்ச்சியில் மற்றொரு பிரதான அம்சம், கலைத்துறை, சமூக அறிவியல்துறை, கல்வியியல், வணிகவியல், முகாமைத்துவம் என்பன தாய்மொழியில் கற்பிக்கப்பட்டு வருவதாகும். பாடசாலைகளில் சகல நிலைகளிலும் தாய்மொழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, பல்கலைக்கழகங்களும் இத்துறைகளில் தாய்மொழிக் கல்விக்கு இடமளித்தன. கலைத்துறைப் பாடநெறிகளில் (உதாரணமாக பொருளியல், புவியியல்) உயர்பட்டப்படிப்புகளைக் கூட தாய்மொழியில் பயில அனுமதி கிடைத்தது. தாய்மொழியில் முதுகலைமாணி மற்றும் கலாநிதிப் பட்ட ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. இன்று இவ்வாறான உயர் பட்டங்களைப் பெற்ற பலர் தமது தாய்மொழியிலேயே ஆய்வேடுகளை எழுதினர். கல்வியியல் துறையில் சமர்ப்பிக்கப்படும் பெரும்பாலான ஆய்வேடுகள் தாய்மொழியில் எழுதப்பட்டவை.

எவ்வாறாயினும் அண்மைக் காலங்களில் கோளமயமாக்கம், அதன் காரணமாக ஆங்கிலமொழி பெற்றுவரும் உலகளாவிய முக்கியத்துவம் காரணமாக, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இதுவரை தாய்மொழிக் கல்வியை வழங்கிய பலதுறைகள், தற்போது ஆங்கிலவழிக் கல்வியை அறிமுகம் செய்து வருகின்றன. உலகளாவிய ரீதியில் நெதர்லாந்து, ஜப்பான், சீனா, தாய்லாந்து, மலேசியா முதலிய ஆங்கிலம் பேசாத நாடுகளின் பல்கலைக்கழகங்கள் ஆங்கிலமொழி பெற்று வரும் முக்கியத்துவம் கருதி பல துறைகளில் ஆங்கிலவழிக் கல்வியை நாடும் வெளிநாட்டு மாணவர்களைக் கவரும் நோக்குடன் இவ்வாறான மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. உதாரணமாக, ஆங்கிலமொழிப் பாரம்பரியமற்ற சீனா மருத்துவக் கல்வியை ஆங்கிலமொழியில் வழங்கிவருவதும் இந்திய மாணவர்கள் அங்கு அனுமதி பெறுவதும் இன்றைய ஒரு பிரதான செல்நெறியாகும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் உள்ள சமூக அறிவியல், கலை, கல்வியியல் துறைகளில் 1960களில் அகற்றப்பட்ட ஆங்கில வழிக்கல்வி தற்போது மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு வருவது ஒரு பிரதான மாற்றம்.

1921ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியும் அதனைத் தொடர்ந:து 1942இல் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகமும் ஆரம்பத்தில் மேன்மக்களுக்கான உயர் கல்வி நிறுவனங்களாக அமைந்தன. உயர்தரமான நகர்ப்புற ஆங்கிலப் பாடசாலைகளில் கல்வி பயின்றவர்களே அங்கு அனுமதி பெற்றனர். மேலைநாட்டுப் பாணியில் அந்நிறுவனங்கள் ஆங்கிலமொழிவழியில் சமூகத்தின் மேன்மக்களுக்கான உயர்கல்வி நிறுவனங்களாக அவை விளங்கின.

**(கல்வியியல் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களின் நூலிலிருந்து ஒரு பகுதி)**

# பொறுப்புக் கூற வேண்டிய விடயங்களுக்கு பதில் சொல்லுங்கள், இல்லையேல்...

## மனித உரிமை அமைப்புகள் எச்சரிக்கை

இலங்கையிலுள்ள 32 மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் கூட்டாகக் கடந்த செவ்வாய்க்கிழமை மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவை அவரது அமைச்சுக் காரியாலயத்தில் சந்தித்து உரையாடினார். மனித உரிமை மீறல் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய விடயங்களுக்கு பதில் அளிக்குமாறு அவர்கள் வேண்டிக் கொண்டனர்.

அல்லது ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் ஏற்படும் பின் விளைவுகளுக்கு முகம் கொடுக்குமாறும் அவர்கள் எச்சரித்தனர்.

"தங்களைத் துரோகிகள் எனக் கூறி அபகீர்த்திக்கு உள்ளாக்க அரசாங்கம் முயற்சி செய்தாலும் தாங்கள், தங்கள் நடவடிக்கையை கைவிடப் போவதில்லை" என்று மேற்படி அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி சம்பத் புஸ்ப குமார தெரிவித்தார்.

பிரிட்டனைத் தளமாகக் கொண்டியங்கும் உலகத் தமிழர் பேரவையும் அண்மையில் இலங்கையின் பருவகால மீளாய்வு சம்பந்தமாக ஐ.நா.மனித உரிமைப் பேரவையை சந்தித்துக் கலந்துரையாடி இருக்கிறது. "பொறுப்புக் கூற வேண்டிய எந்தத் தேவையும் இல்லாமல் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை தேசிய, சர்வதேச அரங்கு களில் அம்பலப்படுத்த நாம் தயாராக இருக்கின்றோம் என்று உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளரான சுரேஷ் சுரேந்திரன் தெரிவித்தார்.

# அணு உலை பாதுகாப்பு இந்தியா, ஜப்பான் ஆலோசனை

அணு மின் உற்பத்தி நிலையங்களின் பாதுகாப்பு விஷயத்தில் இந்தியாவும், ஜப்பானும் கூட்டாக செயல்பட முடிவெடுக்கப்பட்டது. அணு மின் உற்பதித் துறையில் இந்தியாவும், ஜப்பானும் பரஸ்பரம் ஒத்துழைக்கவும், பாதுகாப்பு விஷயங்களை பரிமாறிக் கொள்ளவும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதற்காக இந்தியாவிலிருந்து மத்திய திட்டக் குழு துணை தலைவர் மான்டேக்சிங் அலுவாலியா தலைமையில் ஒரு குழுவினர் டோக்கியோ வந்துள்ளனர். இக்குழுவினர் ஜப்பானில் பொருளாதார அமைச்சர் யுகியோ எடானோ மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். இந்த ஆலோசனையின்போது, இந்தியாவில் அணு மின் உற்பத்தியை விரிவாக்கம் செய்யும் திட்டங்கள் குறித்து அலுவாலியா விளக்கினார். இதன்பின், இரு நாடுகளும் இணைந்து வெளியிட்டது.

அணு மின் உற்பத்தி திட்டங்களின் செயல்பாடு மற்றும் பாதுகாப்பு விஷயங்களில் இருநாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைக்க தீர்மானிக்கப்பட்டது.

புகுஷிமா அணு மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்து மூலம் அறிந்து கொண்ட அனுபவங்களை கொண்டு பாதுகாப்பு அம்சங்களில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களை இருநாடுகளும் பேசி முடிவெடுத் துள்ளதாக கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

# ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சர்வாதிகாரங்கள் தேவை

## - ஜேர்மனியின் முன்னாள் வெளியுறவு அமைச்சர்

ஐரோப்பாவில் வர்க்கப் போராட்டம் தீவிரமாகையில், ஐரோப்பிய ஒன்றியம் என்பது ஆளும் உயரடுக்கின் ஒரு கருவி என்பது இன்னும் வெளிப்படையாகத் தெரிகிறது.

இதைப் பாதுகாப்பவர்களின் சிந்தனைப் போக்கும் இதைத்தான் தெரியப்படுத்துகிறது. கடந்த வாரம் ஜேர்மனியின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜொஷ்கா பிஷர் (பசுமைக் கட்சி) ஜெர்மன் பத்திரிகையொன்றில், ஐரோப்பிய ஒன்றியம் சர்வாதிகார வகைகளில் ஆட்சி நடத்த வேண்டும் என வாதிட்டு ஒரு கட்டுரையை வெளியிட்டார்.

ஐரோப்பா மீது ஜேர்மனியின் மேலாதிக்கம் மற்றும் வரவு-செலவுத் திட்ட கொள்கையில் அனைத்து ஜனநாயகரீதியான தடைகள் அகற்றப்படுதல் என்பதைத்தான் இவர் கருதுகின்றார். நெருக்கடியின் அழுத்தத்தின்கீழ் யூரோப்பகுதி ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாவலனாக உள்ளது, ஜேர்மனி "தலைமை தாங்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சக்தி" என்று தத்தம் தகுதியை நிரூபித்துள்ளன.

பிஷரின் கூற்றுப்படி இந்த பாதுகாவலன் தேசிய இறைமையைக் குறை மதிப்பிற்கு உட்படுத்தும் பல நடவடிக்கைகளை எடுத்ததற்கும், ஓர் உண்மையான அனைத்து - ஐரோப்பியப் பொருளாதார அரசாங்கத்தை தோற்றுவித்ததற்கும் பாராட்டுகிறார்.

ஐரோப்பாவில் அரசியல் ஒன்றியத்திற்கு இது ஒரு அடி என்று பிஷர் வெளிப்படையாகப் பாராட்டுகிறார்.

பேர்லின் இதை முன் னேற்றுவிப்பதற்குப் தன்னுடைய முக்கிய பங்கைப் பயன்படுத்த 'வேண்டும் என்று அழைப்பு விடுத் துள்ளார்.

எல்லாவற்றிற்கும் மேலாக இதன் பொருள் யூரோப்பகுதி தனி நாடுகளில் மிருகத்தனச் சிக்கன நடவடிக்கைகள் எடுக்க ஆணைகளிடப்பட வேண்டும். ஏற்கனவே கிரேக்கம், போர்த்துக்கல் மற்றும் அயர்லாந்தில் இவ்வாறுதான் நடக்கிறது என்றும் அவர் கூறுகிறார்.

# வெளிவிவகார அமைச்சு மற்றும் மின் சக்தி எரிசக்தி அமைச்சின் பிரதிநிதிகள் இந்தியா பயணம்

தென் இந்தியாவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கூடங்குளம் அணு மின் உற்பத்தி நிலையத்தினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து இந்திய அதிகாரிகளுடன் இலங்கைப் பிரதிநிதிகளும் இன்று கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாக அணுசக்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அணு தாக்கம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒத்துழைப்புகள் தொடர்பில் இருநாட்டு பிரதிநிதிகளும் புதுடில்லியில் கலந்துரையாடவுள்ளனர்.

இந்தியாவின் அழைப்பின் பேரில் வெளிவிவகார அமைச்சு மற்றும் மின் கச்தி எரிசக்தி அமைச்சின் பிரதிநிதிகள் இந்தியா சென்றுள்ளதாக அதிகார சபையின் தலைவர் கலாநிதி ரஞ்ஜித் விஜேவர்தன கூறினார்.

# இலங்கையில் முதலீடு செய்ய பாகிஸ்தானுக்கு அழைப்பு

இந்தியாவின் இரண்டு மருந்து விநியோகம் செய்யும் நிறுவனங்களுக்கு இலங்கையில் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், மருந்தாக்கல் துறையில் முதலீடு செய்வதற்கு பாகிஸ்தான் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் வர்த்தக குழுமத்தின் தலைவர் ரோஹித திலகரட்ன இந்த அழைப்பினை விடுத்துள்ளார். இலங்கையில் மருந்தாக்கல் கைத்தொழில் பேட்டை ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர், அதில் பாகிஸ்தானின் மருந்தாக்கல் துறையில் ஈடுபட்டுள்ளவர்களையும் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மருந்தாக்கல் துறையை ஒரு கைத்தொழிலாக உருவாக்கும் எண்ணத்திலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மின்னேரியா காட்டுப்பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகள் மீட்பு

மின்னேரியா காட்டுப்பகுதியில் அகப்பட்டுக்கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் சுற்றுலாப் பயணிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னேரியா காட்டுப்பகுதியில் பெய்த கடும் மழையைத் தொடர்ந்து கிரிஓயாவின் நீர் மட்டம் உயர்ந்தமையினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட குழுவினர் இங்கு அகப்பட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# புதிய முறையின் கீழ் முதலாவது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முல்லையில்!

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டத்தின் படியான முதலாவது தேர்தல்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைத்துறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பில் பிரதேச சபைகளில் இடம்பெறும்.

இத்தகவலை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.ஐ.எம்.அதாவுல்லா தெரிவித்தார். புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைமையின்படி எழுபது சதவீதமான உறுப்பினர்கள் வட்டார அடிப்படையிலும் முப்பது சதவீதமான உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின்படியும் தெரிவு செய்யப்படுவார்கள்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல்களுக்காக புதிய தேர்தல் முறையொன்றை அறிமுகம் செய்யும் இரண்டு சட்டங்கள் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

ஊள்ளூராட்சிமன்றங்கள் (விசேட ஏற்பாடு) சட்ட மூலம், உள்ளூராட்சிமன்றங்கள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் என் பவை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாகாணசபை மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களிலும் இம்முறை அறிமுகம் செய்யப்படுமென உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் ஏ.ஐ.எம் அதாவுல்லா கூறினார். இந்தப் புதிய தேர்தல் முறையின்படி 30 சதவீதமான அங்கத்தவர்கள் விகிதாசார முறையிலும் 70 சதவீதமானோர் அவரவர் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் தொகுதி ரீதியாகவும் தெரிவு செய்யப்படுவர்.

தனது கட்சி பிரேரித்த திருத்தங்கள் பின்னர் சேர்க்கப்படும் என்ற விளக்கத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கிம் ஆகியோரும் இதேபோன்ற கருத்தையே கூறினர். புதிய சட்டத்தின்படி உள்ளூ ராட்சி மன்றத்தின் வரவு - செலவுத் திட்டம் இரண்டு தடைவைகள் தோற்கடிக்கப்படுமாயின் உள்ளூராட்சிமன்றின் தலைவர் பதவி விலகவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைத்துரைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் இந்தப் புதிய சட்டத்தின் கீழ் நடைபெறும் முதலாவது தேர்தல்க ளாக இருக்கும் என அமைச்சர் அதாவுல்லா கூறினார்.


# ஆசிரியப் பெருந்தகை செல்லப்பா முத்துக்குமாரசுவாமி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நீண்ட காலம் இரசாயன ஆசிரியராக பணி புரிந்து ஆயிரக்கணக்கான மருத்துவ நிபுணர்கள், பொறியிலாளர்கள் போன்றவர்களை உருவாக்கிய மென்மையான இதயமும் மேலான பண்புகளும் கொண்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களின் பெரு மதிப்புக்கு உரிய ஆசிரியப் பெருந்தகை செல்லப்பா முத்துக்குமாரசுவாமி அவர்கள் நேற்று முன்தினம் தனது 86ம் வயதில் மாரடைப்பினால் கொழும்பில் காலமாகிவிட்டார்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த அமரர் ஐயாத்துரை செல்லப்பா - அமரர் வள்ளியம்மைப்பிள்ளை தம்பதிகளின் ஒரே புதல்வரான செல்லப்பா முத்துக்குமாரசுவாமி அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் தனது பாடசாலைக் கல்வியைக் கற்று பின்னர் யாழ் இந்துக் கல்லூரியில் இரசாயன ஆசிரியராகக் கடமை யாற்றி யாழ் இந்துக் கல்லூ ரியின் உப அதிபராகவும் விளங்கி இளைப்பாறியவர்.

யோக சுவாமிகள் மீது மிகவும் பற்றுக் கொண்ட முத்துக்குமாரசுவாமி அவர்கள் சிவதொண்டன் நிலையத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக விளங்கியவர்.

அத்துடன் 1979ம் ஆண்டு மே மாதம் கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழாவின் போது நிகழவிருந்த இரத்தக் களரியைத் தடுத்து வட இலங்கையில் சுமுகமான ஆலயப் பிரவேசங்கள் நடைபெற வழிகோலியவர். நேற்று கொழும்பில் அவரது இறுதிக்கிரியைகள் நடைபெற்றன.





# சட்டத்திற்கு புறம்பாக கொள்ளை இலாபம்

மன்னர்கள் காலத்திலிருந்து கோயில்கள், கோட்டை, கொத்தளங்கள் கட்டக் கொத்தடிமைகளை ஈடுபடுத்திப் பாறைகளையும் கற்களையும் உடைத்துப் பயன்படுத்தியிருந்தார்கள். இன்று நவீனக் கனரக இயந்திரங்களின் உதவியுடன், பெரும் முதலீடுகளுடன், தொலைநோக்கற்ற நகர அபிவிருத்தித் திட்டங்கள், அடுக்குமாடிக் கட்டடப் பணிகள், சாலைகள் அமைப்பு, கொள்ளை லாபம் ஈட்டும் பாறைகள் வியாபாரம் ஆகியவற்றின் முக்கியகூறாக இயங்குகிறது. வெட்டப்பட்ட பாறைகளை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளில் சீனாவும் இந்தியாவும் முதல் இடங்களில் உள்ளனவாம்.எமது நாட்டில் வடக்கில் சுண்ணாம்புப் பாறைகள் பெருமுதலாளிகளால் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டும் உள்ளது.

பல கோடி ஆண்டுகளுக்கு முன் உருவான கடினப்பாறைகள் கட்டுமானப் பணிகளுக்காகத் தோண்டியெடுக்கப்பட்டுத் தகர்க்கப்படுகின்றன. உருவான விதம், கனிமத் தொகுப்பு, கடினத் தன்மை, செப்பனிட்டால் மெருகேறும் தன்மை ஆகியவற்றால் அவை மாறுபட்டாலும், அனைத்தையும் “கிரனைட்” என்றே அழைக்கின்றனர். எடுத்துக்காட்டாக “பிளாக் கிரானைட்” என்றழைக்கப்படும் பாறை கிரானைட்டே அல்ல. அது “டோலரைட்” என்னும் கரும்பாறை. அது கிரானைட்டைவிடக் கடினமாக இருப்பதால் அதிக விலைக்குப் போகக்கூடியது. முன்னாட்களில் பாறை உடைக்கப்பட்ட பகுதியைப் “பாறைக்குழி”, “கல்வெட்டாங்குழி” எனக் குறிப்பிட்டனர். இன்று பாறைகளை வெட்டித் தோண்டியெடுக்க வசதியாக ஆழமாகவும் அகலமாகவும் தோண்டப்படும் குழியைக் “குவாரி” எனக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு தமிழ்ப்படுத்தப்பட்ட “க்வேரி” (quarry) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு “இரை”யாகப் பிடிபடப்போவது என்ற பொருளும் உண்டு. அரசுத் துறைகளின் உதவியுடன் கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கும் குவாரி உரிமையாளர்கள் என்ற பண முதலைகளின் பேராசைக்கு “இரை“யாபவை இயற்கைவளம், சுற்றுச்சூழல், மக்கள் நலம் என அடுக்கிக்கொண்டே போகலாம்.

பாறைகளைத் தோண்டி எடுப்பதால் பல்லுயிரியம் (biodiversity) பெருத்த பாதிப்புக்குள்ளாகிறது. பல்லுயிரியம் ஒரு நில அமைப்பில் வாழும் பாசி, புல், பூண்டு முதல் செடி, கொடிகள், மரங்கள் வரையான தாவரங்கள், புழு, பூச்சியிலிருந்து யானை வரையான வன விலங்குகள், வளர்ப்பு மிருகங்கள், பறவைகள், மனித இனம் என அனைத்தும் ஏதாவது ஒரு வகையில் ஒன்றை ஒன்று சார்ந்து இயங்கும் நுட்பமான உயிர்ச்சூழல். அங்கு செழித்த பயிரினங்கள், பல்கிப் பெருகி வாழ்ந்த உயிரினங்கள் ஆகியவற்றின் வாழிடங்கள் குவாரி தோண்டுவதால் அழிக்கப்படுவது நேரடித்தாக்கம். குவாரிகளின் அருகிலுள்ள நீர்நிலைகள் வற்றுதல், நிலத்தடி நீர் மாசடைதல், காற்றில் பாறைத் துகள்கள் பரவுதல் போன்ற சேதங்கள் மறைமுகத் தாக்கங்கள்.

குவாரித் தொழிலாளர்கள் படும் அவலங்கள் பல. இறுகிய கடினப் பாறைகளை வெடி வைத்துத் தகர்க்கும்போதும் உடைத்து ஜல்லிக் கற்களாக நொறுக்கும்போதும் மணற்சாரத்தாலான சிலிகா துகள்கள் காற்றில் பரவுகின்றன. அவற்றைச் சுவாசிக்கும் கல்லுடைக்கும் தொழிலாளர்கள் நுரையீரல் சம்பந்தப்பட்ட சுவாச உபாதைகளால் அல்லல்படுகின்றனர்.

சிலிகா துகள்கள் நாள்பட நுரையீரலில் படிவதால் ஏற்படும் சிலிக்கோஸிஸ் என்னும் வியாதி முற்றினால் மரணம் ஏற்படும். சிங்கப்பூரில் சிலிக்கோஸிஸ் பிணியால் பீடிக்கப் பட்டவர்களில் 78 வீதமானோர் அங்குள்ள 200 குவாரிகளில் கல்லுடைக்கும் தொழிலாளர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் 1970 - 80 காலகட்டத்தில் பாறைத் துகள்கள் பரவாமல் தடுக்க நீரைப் பாய்ச்சுவது, தொழிலாளர்கள் துகள்களைச் சுவாசிப்பதைக் குறைக்க முகத்தைப் பொத்தும் முகமூடி அணிவது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால், அந்நோயாளிகளின் எண்ணிக்கை குறையலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. காலந் தாழ்த்தி ஏற்படும் மீஸோதீலியாமா எனப்படும் நுரையீரல் புற்று, காசம் போன்ற நோய்களும் பாறைத் துகள்களை வெகுநாட்கள் சுவாசித்தவர்களுக்கு ஏற்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டது.

சிலிக்கோஸிஸ் அபாயம் இருப்பதை உணர்ந்து, இந்த நோய் ஆரம்பக் கட்டத்தில் இருந்தாலும் அது பற்றி மருத்துவத் துறைக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் அத்தகைய தொழிலாளர்கள் வருடந்தோறும் எக்ஸ்ரேயுடன் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

குவாரிகளில் பாறைகளை உடைக்கும் பகுதிகளில் பாறைத் துகள்கள் உருவாகிப் புகைமண்டலம்போல் காற்றில் பரவுவதைப் பல இடங்களில் காணலாம். பாறைகளைத் தோண்டும்போது குழிகளைச் சுற்றிக் குவிக்கப்படும் மண், மணல், பாறைத் துகள்கள் காற்றால் பரப்பப்பட்டும் மழையால் அடித்துச் செல்லப்பட்டும் அருகிலுள்ள ஓடைகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளை அடைந்து அவற்றை நாளாவட்டத்தில் தூர்த்துவிடும். இது காற்று வீசும் திசை, காற்றின் வேகம், காற்று மண்டலத்தின் ஈரத்தன்மை, மழையின் அளவு, குவாரி அமைந்த இடம் ஆகியவற்றைப்
பொறுத்து அமையும். பாப்புவா நியூகினியில் தங்கம் தோ[...]
தூர்த்துப் பாழடிப்பதை எதிர்த்து நதியின் மருங்கில் வாழு[...]
பெற்றனர்.

உடைக்கப்படும் பாறைகளின் கனிமத் தொகுப்பிலுள்ள [...]
அருகாமையிலுள்ள விளைநிலங்களில் உள்ள மண் களர்[...]
மண்ணாகவோ மாறிவிடும். இதைத் திருத்தி, மறுபடியும் [...]
படியும் பாறைத் துகள்கள் மரம், செடி, கொடி, பயிர்களின்[...]
வளர்ச்சியையும் சிதைத்துவிடும்.

கல்லுடைப்பு நிறுத்தப்பட்ட குவாரிகள் பலவற்றில் குப்பை[...]
நிரப்பி அவற்றை மூடுவதற்கு முன், சில முன்னெச்சரிக்கை[...]
அடிப்பரப்பிலுள்ள விரிசல்களைச் சிமெண்டால் மூடுவது, [...]
படிவங்கள்போலப் பரப்பி இடையிடையே குப்பை மக்குவத[...]
குழாய்கள் அமைப்பது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்[...]

கல்லுடைக்கும் வேலை முடிந்த பல குவாரிகள் திறந்த [...]
இத்தகைய குவாரிகளில் இறங்கும் மழை நீர் ஆழமற்ற ப[...]
நோய் பரப்பும் நுண்ணுயிர்கள் கலந்த நீரைக் குவாரியின் [...]
குடிப்பவர்களுக்கு நீர் வழிப் பரவும் வாந்தி பேதி, காமாலை[...]
கண்கூடு. சிறுநீர்க் கழிவிலிருந்து நீரில் கலக்கும் நைட்ரே[...]

நீரில் லீற்றருக்கு 20 மில்லி கிராமிற்கு அதிகமாக நைட்[...]
மீறிய நீரைப் பருகுவதால் சோர்வு, வாந்தி, மூச்சுத் திண[...]
அம்மோனியம் நைட்ரேட் கலந்த வெடிமருந்து பய[...]த்த[...]
நைட்ரேட் இருந்து அதைக் கைக்குழந்தைகளுக்குக் கொடு[...]
இறந்துவிடும். அந்த நீரைக் கொதிக்கவைத்தாலும் நைட்ரே[...]


புகை பிடித்தலுக்கு அடுத்த படியாக நுரையீரல் புற்றுநோ[...]
பாறைகளிலிருந்து வெளியாகும் ரேடான் (Rn222) என்னும்[...]
சுவாசிப்பது. 1940 - 50களில் செக்கோஸ்லேவியாவிலுள்ள [...]
தொழிலாளர்கள் பலருக்கு நுரையீரல் புற்றுநோய் ஏற்பட்ட[...]
தொழிலாளர்களில் பெரும் விழுக்காட்டினர் புகைபிடிக்காத[...]
சுரங்கத்தினடியில் தேங்கிய ரேடான்வாயுவை வெளியேற்ற[...]
ரேடான்வாயு பெக்கரல் (Bq.- Becqueral) என்னும் அலகா[...]
பெக்கரல் என்றும் ஒரு லிட்டர் நீரில் இவ்வளவு பெக்கரல்[...]
கட்டடங்களிலும் குவாரிகளிலும் அவற்றுக்கு அருகேயுள்ள [...]


குடிநீரில் கலந்த ரேடான்வாயு லிட்டருக்கு 11.83 பெக்க[...]
அமைப்பு விதித்த வரம்பு. ரேடான் அதிகம் கலந்த நீரைப்[...]
உள்ளன. அண்மையில்

கோயில்கள், குளங்கள், குன்றுகள் எனப் பாராமல் கண்[...]










# செயற்படும் குவாரிகள்
# ஈட்டும் வியாபாரம்

ன்டும் சி ஆஸ்திரேலியக் கம்பெனிகள் ஆறுகளைத்
குடியினர் இழப்பீடு கேட்டுப் போராடி வெற்றியும்

வேதியியல் தன்மையைப் பொறுத்துத் தோண்டு குழிகளின்
ண்ணாகவோ (alkaline) அமிலத்தன்மை கொண்ட
ளைநிலமாக்குவது கடினமான வேலை. சிமெண்ட்போலப்
இலைகளில் படிந்து நாளாவட்டத்தில் அவற்றின்

களைக் கொட்டி நிரப்புவதைக் காணலாம். குப்பையை
நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குவாரியின்
பாலிதீன் பாய்கள் விரிப்பது, குப்பைகளைப்
ல் உருவாகும் மீத்தேன் எரிவாயுவை வெளியேற்றக்
கைகளை வளர்ச்சியடைந்த நாடுகள் மேற்கொள்கின்றன.
வெளியில் கழிவுகள் போடப்படும்இடங்களாக இருக்கின்றன.
தியில் உள்ள நிலத்தடி நீரை மாசுபடுத்தும். மலத்திலுள்ள
அருகிலுள்ள தோண்டு கிணறுகளிலிருந்து இரைத்துக்
, டைஃபாயிட், காலரா போன்ற நோய்கள் ஏற்படுவது
, நைட்ரைட் போன்றவை நீரை மாசுபடுத்தும்.
ரேட் இருந்தால் அது குடிக்கலாயக்கற்றது. அந்த வரம்பை
ல் ஏற்படும். குவாரிகளில் பாறைகளை உடைக்க
படுகிற ஒரு லிட்டர் நீரில் 45 மில்லி கிராம் அளவில்
த்தால் அவை நீலம் பாரித்து (blue baby syndrome)
அடர்த்தி கூடுவதால் குடிக்கத் தகுதியற்றது.
ய் உருவாக முக்கியக் காரணம் கிரானைட்
வாசனையற்ற, கதிரியக்கம் கொண்ட இயற்கை வாயுவைச்
சுரங்கங்களில் தேங்கிய ரேடான்வாயுவைச் சுவாசிப்பதால்
கண்டறியப்பட்டது. நுரையீரல் புற்றுநோய் வந்த சுரங்கத்
ர்கள் என்பதே இந்நோய் பற்றிய ஆய்வை முடுக்கிவிட்டது.
குழாய்கள் அமைத்தபோது நிலைமை மாறியது.
அளக்கப்படுகிறது. ஒரு கன மீற்றர் காற்றில் இத்தனை
என்றும் குறிப்பிடப்படுகிறது. கிரனைட் கற்களால் கட்டப்பட்ட
கட்டடங்களிலும் ரேடான் வாயு கூடுதலாக இருக்கும்.
லுக்கு மேல் இருக்கக் கூடாது என்பது உலக சுகாதார
பருகுவோருக்குக் குடல் புற்றுநோய் உருவாக வாய்ப்புகள்

டித்தனமாகத் தோண்டிப் பாறைகளை எடுப்பதால் சில இடங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க தொல்லியல் சின்னங்கள் சிதைந்துவிடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. தொல்லியல் சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரிக்க சட்ட விதிகள் உள்ளன. புராதனச் சின்னங்களிலிருந்து குறிப்பிட்ட பகுதி வரையான நிலம் பாதுகாக்கப்பட்ட பகுதி எனவும் அங்கு கட்டுமான வேலைகளோ தோண்டுவதோ கூடாது என்கிறது. அதை மீறுவது சட்டத்திற்குப் புறம்பானது.

இந்தியாவின் தமிழகம் முத்துப்பட்டியில் உள்ள கி. மு. முதல் நூற்றாண்டுச் சமணச் சின்னங்கள், அரிட்டாபட்டியில் உள்ள கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குடைவரைச் சிவன்கோயில் ஆகிய தொல்லியல் சின்னங்களுக்கு அருகே நடந்த பாறை உடைப்பு மக்கள் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டது.


காடு, மலைகளை அழித்துச் சுரங்கம் தோண்டிக் கனிமம் எடுப்பது, குவாரிகள் தோண்டிப் பாறைகளை உடைப்பது போன்ற வேலைகள் மீட்க முடியாத சூழலியல் நாசங்கள். காடுகள்கூட மீண்டும் வளரலாம். மலைகள் பாறைகள், கனிமங்கள் திரும்பிவர மாட்டா. மேற்குத் தொடர்ச்சி மலைக்குப் பாதுகாக்கப்பட்ட பாரம்பரியம் (World Heritage Site) என்னும் அந்தஸ்து கொடுக்கப்பட்டபோது சூழலியல் ஆர்வலர்கள் கொண்டாடினர்.


அசுரகதியில் வளரும் தொழில்நுட்பத்துடன் பெருகும் சமுதாயத்தின் தேவைகளால் வளரும் வீடுகள், அடுக்குமாடிக் கட்டடங்கள், சாலைகள், அணைகள், கடலலை அரிப்பைத் தடுக்கும் கரைகள் ஆகியவற்றை அமைக்கப் பாறைகள் தோண்டப்படுவது இன்று பெரும் தேவையாக உள்ளது. பல்லுயிரியத்தை வெகுவாகச் சேதப்படுத்தாமல், கற்குழிகள் எழுந்தமானமாகத் தோண்டப்படுவது நிறுத்தப்பட்டு வனவளம் பாதுகாக்கப்படலாம் என்னும் கனவு நனவாக வேண்டும். ஆனால் குவாரிகளால் நிலங்கள் அழிக்கப்படும் சாபக்கேட்டிற்குச் சில பரிகாரங்கள் உள்ளன. ஒன்று அரசின் அனுமதியுடன் மட்டுமே குடியிருப்புகளிலிருந்து குறிப்பிட்ட தொலைவில் வரையறுக்கப்பட்ட ஆழத்திற்கு மட்டுமே தோண்ட வேண்டும் என்பது. இதில் சம்பந்தப்பட்ட கனிமத்துறை தொடங்கி அரசு அதிகாரிகள் அனைவரும் கண்டிப்பாகவும் நேர்மையாகவும் செயல்பட வேண்டும்.

பாறைகளை உடைக்கும்போது அவற்றின் மீது நீரைப் பாய்ச்சி ஈரப்படுத்தினால் துகள்கள் பரவுவது கட்டுப்படுத்தப்படும். அதுபோலப் பாறைகளை அறுக்கும்போதும் நீரைப் பயன்படுத்த வேண்டும். கழிவுநீரைச் சிறு தேக்கங்களில் விட்டுப் பாறைத் துகள்கள் மண்டியாகப் படிந்து மேலே எழும் தெளிநீரை மட்டுமே ஓடைகளில் விடலாம். மண்டியாக நிற்கும் பாறைத்துகள் திரட்டைத் தனியாக எடுத்துச் சிமெண்ட்டுடன் கலந்து கட்டடங்கள் கட்டப் பயன்படுத்தலாம். நிலத்தடி நீர் மட்டத்தை அடையும் அளவுக்குக் குவாரிகள் தோண்டக் கூடாது. சில குவாரிகளில் நீர்மட்டத்தைத் தொடும் ஆழத்தில் ஏற்படும் நீர்ப் பெருக்கைக் குறைக்க நீரேற்றிகள் மூலம் அதை வெளியேற்றுவது நிலத்தடி நீர்மட்டத்தைத் தாழ்த்திவிடும். மேலும் நிலத்தடி நீர்மட்டத்தைத் தொடுவதால் குவாரியில் பயன்படுத்தப்படும் டீஸல், வெடி மருந்து, மனிதக் கழிவுகள் நிலத்தடி நீரை மாசுபடுத்துவதைத் தவிர்க்கலாம். குவாரி தோண்டுதல் முடிந்தவுடன் சேதாரமான பாறைகளையும் கற்களையும் கொண்டு குவாரிகளை நிரப்பி, அதன்மேல் நிலமட்டம்வரை மண் நிரப்ப வேண்டும். கொட்டிய மண்ணின் மீது மரம், செடி, கொடிகள் நட்டுக் குவாரியால் நாசப்பட்ட சூழலுக்கு ஓரளவு உயிர் கொடுக்க வேண்டும். இப்படியெல்லாம் உள்ள சட்டதிட்டங்களின்படி செய்வதாக ஒத்துக்கொண்ட பின்னரே அவர்களுக்குக் குவாரி தோண்ட உரிமை அளிக்க வேண்டும். இவை சம்பியா போன்ற ஆப்பிரிக்க ஏழை நாடுகளில்கூட அமுல்படுத்தப்படுகிறது. தகர்த்துத் தரைமட்டமாக்கிய குன்றுகளைத் திரும்பக் கொண்டுவர முடியாது. மறுபடியும் அங்கு வனங்கள் உருவாக நூறாண்டுகளுக்கும் மேலாகும். வனவிலங்குள் சில திரும்பலாம், ஆனால் மனிதர்கள் அங்கு வாழ முடியுமா என்பது கேள்விக்குறி.

குவாரிகளில் பணிபுரிபவர்களின் நலம் காக்கப்பட வேண்டும். நுரையீரல் உபாதை போன்ற நோய்களால் அவதிப்படுபவர்களுக்கு மருத்துவ வசதிகள் செய்துதர வேண்டும். பொதுவாகக் குவாரித் தொழிலாளி ஒருவனுக்குக் காசம் ஏற்பட்டால் அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டு அவனுக்குப் பதிலாக அவன் வீட்டிலிருந்து வேறொருவனை வேலைக்கு அமர்த்துவது கொத்தடிமை வேலை முறையின் நடப்பு. அதனால் கல்லுடைப்பு வேலை தொடரும். ஆனால் நோய் கண்டவன் நொந்து நலிந்து சாவான். அவன் குடும்பத்தினருக்கு இழப்பீடும் கிடைக்காது. இத்தகைய அவலங்களுக்குத் தீர்வுகாண வேண்டும். கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்கு முகமூடி, கையுறை, காலணிகள் கொடுத்தால் கல்லறைகளுக்குச் செல்லும் குவாரித் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறையும்.

காடும் மலையும் அவற்றைச் சார்ந்த நிலங்களும் மழையின்றி வரண்டுபோவதால் பாலைநிலம் உருவாவதை "முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பழிந்து, நடுங்கு துயருறுத்தம் பாலையென்பதோர் படிவாங் கொள்ளும்" என்று பாடிய இளங்கோ - அனைத்து வகை நிலங்களிலும் பாறைகள் தோண்டப் படுவதால் அவை ஒன்றுக்கும் பயன்படாப் பாழ்நிலம் ஆகிவிடும் என்பதை எடுத்துக்கூறியுள்ளார்.





## சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களை

# மானூஸ் தீவுக்கு அனுப்ப அவுஸ்திரேலிய பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது

சட்டவிரோதமான படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்தவர்களை பப்புவா நியூகினியின் மனூஸ் தீவுகளுக்கு அனுப்புவது தொடர்பான சட்டமூலத்துக்கு அவுஸ்திரேலிய நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக் குள் நுழைந்து கிறிஸ்மஸ் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை நாவுறு மற்றும் பப்புவா நியூகினி தீவுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையை அவுஸ்திரேலியா ஆரம்பித்துள்ளது.

நாவுறு தீவுக்கு சுமார் 200 பேர் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் நிலையில், பப்புவா நியூ கினியின் மனூஸ் தீவுக்கு ஆட்களை அனுப்புவது தொடர்பில் சட்டமூலமொன்றை அவுஸ்திரே லியாவின் குடிவரவு, குடியகல்வு அமைச்சர் கிறிஸ்பொவன் முன்வைத்திருந்தார். இச் சட்டமூலத்துக்கு அவுஸ்திரேலிய நாடாளுமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய இன்னும் ஒரு வார காலத்துக்குள் பப்புவா நியூகினியின் மனூஸ் தீவுக்கு அனுப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என அவுஸ்திரேலிய அமைச்சர் பொவன் குறிப்பிட்டுள்ளார். மனூஸ் தீவில் சுமார் 600 பேர் தங்கவைப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

பப்புவா நியூகினிக்கு அனுப்பப்படுபவர்களைத் தங்க வைப்பதற்கான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும், ஒரு வாரத்துக்குள் முதல் தொகுதியினர் அங்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமான முறையில் செல்ல முற்பட்ட 28 பேர் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா, யாழ்ப்பாணம் வீதி பிரவுன்ஸ் சந்தியில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளத்திலிருந்து சிலாவத்துறை நோக்கிப் பயணம் செய்த பஸ் ஒன்றை சோதனையிட்ட புலனாய்வுப் பிரிவினர், குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். கிளிநொச்சி, முல் லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெண்க்ளும் அடங்குவதாகத் தெரிவிக் கப்படுகிறது. வவுனியா காவல்து றையினர் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துகின்றனர்.

# தொகுதி , விகிதாசார அடிப்படையில் இனி உள்ளூராட்சி சபை தேர்தல்கள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தம் தொடர்பான சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அதிகார விசேட ஒழுங்குகள் சட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் ஆகிய உத்தேச பிரேரணைகள் நேற்று முன்தினம் பாராளுமன்றில் வாக்கெடுப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்டன. எனினும், சட்ட மூலம் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதனைத் தொடர்ந்து விருப்பத் தெரிவு முறைமை முற்று முழுதாக இரத்து செய்யப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொகுதிவாரி மற்றும் விகிதாசர அடிப்படையில் நடத்தப்படும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான 70 வீதமான உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையிலும், 30 வீதமான உறுப்பினர்கள் தொகுதி வாரி அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

விருப்பு வாக்கு தேர்தல் முறைமையில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த புதிய முறைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிய சட்டம் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை பலவீனப்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மலையக தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இதன் மூலம் குறவைடையக் கூடும் என மலையக மக்கள் முன்னணி அச்சம் வெளியிட்டுள்ளது.

எனினும், மலையக மக்களுக்கு அநீதி இழைக்கும் வகையிலான தீர்மானங்களை ஜனாதிபதி எடுக்க மாட்டார் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

# நாட்டில் பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்த புலிகள் சதி நடவடிக்கை

## வெளிநாடுகளும், அரச சார்பற்ற அமைப்புகளும் இணைந்து செயற்படுவதாக கூறுகிறார் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன



நாட்டில் அரசியல் ஸ்திரமின்மையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி, பதற்றமான சூழ்நிலையை உருவாக்க பாரிய சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. புலிகளும் வெளிநாடுகளின் சில பிரிவுகளும் இணைந்து இந்த சதி முயற்சியை மேற்கொண்டுள்ளன. சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்த சதி முயற்சிக்கு பங்களிப்பை வழங்கிவருகின்றன என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் பாராளுமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையில் விவாதங்கள் இருப்பின் அது தொடர்பில் ஆராய விசேட குழுவொன்றை நியமிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க யோசனை முன்வைத்திருந்தார்.

அந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொள்கின்றது ஆனால் அந்த விசேட குழுவானது பாராளுமன்றத்திலேயே நியமிக்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேச சக்திகளும் புலிகள் அமைப்பும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து எவ்வாறான சதி முயற்சியை மேற்கொண்டாலும் அரசாங்கம் பொறுமையுடனும் ஒழுக்கத்துடனும் செயற்பட்டு சவால்களை முறியடித்து நாட்டை ஸ்திரப்படுத்துவதுடன் அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் நேற்று முன்தினம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது, அண்மையில் நடந்துமுடிந்த மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் ஊடாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மக்கள் மத்தியில் சிறந்த முறையில் பலமடைந்தது.

இதன் ஊடாக நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லும் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாற்றியமைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றோம்.

குழப்பத்தை ஏற்படுத்த சதி ஆனால் நாட்டில் அரசியல் ஸ்திரமின்மையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி பதற்றமான சூழ்நிலையை உருவாக்கி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான பாரிய சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. புலிகள் நேரடியாக யுத்தத்தின் மூலம் அடைய முயற்சித்த இலக்கை தற்போது யுத்தமின்றி வேறு வழியில் அடைவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

யுத்தத்தின் ஊடாக ஈழம் என்ற கனவை நனவாக்க முயற்சித்தனர். ஆனால் அந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது. தற்போது வேறு வழியில் முயற்சிக்கின்றனர். இந்த சதி முயற்சியில் புலிகளும் வெளிநாடுகளின் சில பிரிவுகளும் இணைந்து இறங்கியுள்ளன. மேலும் சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்த சதி முயற்சிக்கு பங்களிப்பை வழங்கிவருகின்றன.

அதாவது நாட்டில் பதற்றமான சூழலை உருவாக்குவதன் மூலம் அரசாங்கத்துக்கு சிக்கலை உருவாக்குவதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது.

நாட்டில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்துவற்கு சில சக்திகள் திட்டங்களை தீட்டுகின்றன.

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் கடந்த 30 வருடங்களாக நாட்டின் நலனுக்காக சில அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டன. அதேநேரம் நாட்டை பிரிக்கும் முயற்சியில் கடந்த காலங்களில் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சித்தன. அவ்வாறான சில அரசசார்பற்ற நிறுவனங்கள் தற்போதும் அதே முயற்சியில் ஈடுபட்டுவருகின்றன. அவ்வாறான அரச சார்பற்ற நிறுவனங்களே புலிகளின் குறித்த வேறு வடிவிலான முயற்சிக்கு ஆதரவு வழங்குகின்றன. குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து நிதியை பெற்றுவருகின்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற என அமைச்சர் மேலும் கூறினார்.

# வேலைவாய்ப்பு மோசடி: இலங்கையா இந்தியாவில் கைது

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்டுவந்ததாகக் கூறப்படும் 42 வயதான இலங்கைப் பிரஜையொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மலேஷி யாவில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி பல இளைஞர்களை ஏமாற்றியுள்ளதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

திஸ்ஸநாயக அல்லது துஷார் என அழைக்கப்படுகின்ற இந்நபர் பஹர்காஞ் என்னும் பகுதியில் பெண்ணொருவரிடம் பணம் பெற்றுக்கொள்ள வந்தபோது கைது செய்யப்பட்டார்.

இவர் ஒவ்வொரு இளைஞரிடமிருந்தும் 1 முதல் 2 இலட்சம் ரூபாவரை வசூலித்துள்ளார். இலங்கையின் வடமேற்கு மாகாணத்திலுள்ள யக்வில பகுதியைச் சொந்த இடமாகக் கொண்ட இந்நபர், ஜனக்புரியில் தங்கியிருந்தார். கடந்த ஒரு வருடமாக இவர் மோசடியில் ஈடுபட்டுவருகின்றாரென அப்பகுதி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி பெண்ணொருவர் செய்த முறைப்பாட்டையடுத்து இக்கைது இடம்பெற்றதாகவும் பொலிஸார் கூறினர்.

ரஷ்யப் பெண்ணொருவரை திருமணம் முடித்த இவர், சந்தைப்படுத்தும் முகவராக பணியாற்றிவருகின்றார். 2009ஆம் ஆண்டு வர்த்தக விஸாவில் இவர் இந்தியாவுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை நியமிப்பது மிகவும் அவசியமானது

**- ஐ.தே.க.**

உள்ளூராட்சி, தேர்தல் மாற்றங்களை ஆதரிக்கின்றோம். ஆனால், சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவினை நியமிப்பதன் மூலமே இதன் பலாபலன்களைப் பெறமுடியும் என ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல நேற்முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தியாவை போன்று தேர்தல்கள் திணைக்களத்திற்கு அதிகாரங்களை வழங்க வேண்டுமென்றும் சபையில் அவர் தெரி வித்தார். உள்ளூராட்சி சபை தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலம் தொடர்பான விவாதம் நேற் றுமுன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோதே இதில் கலந்து கொண்டு உரையாற்றிய லக்ஷ் மன் கிரியெல்ல எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவை நியமிப்பதன் மூலமே நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை எதிர்பார்க்க முடியும்.

அத்தோடு 17 ஆவது சட்டம் அமுல்படுத்தப்பட்டு அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களும் நியமிக்கப்பட வேண்டும். இந்தியாவைப் போன்று தேர்தல்கள் ஆணை யாளருக்கும் திணைக்களத்திற்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார். அமைச்சர் விமல் வீரவன்ஸ விருப்பு வாக்கு முறை குழப்பகர மானது.

அதனை ஒழிப்பது சிறந்தது. தொகுதி ரீதியான தேர்தல் முறைமையால் மக்களுக்கு தமது மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியும். எனவே, இம் மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி எடுத்த முயற்சி அமைச்சர்தினேஷ் குணவர்தன உட்பட இதற்கான தெரிவுக் குழுக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என இங்கு உரையாற்றிய அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

ரோசி சேனாநாயக்க எம்.பி. உள்ளூராட்சி சபைகளில் பெண்ணின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டபோதும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. நல்லாட்சிக்கு பெண்களின் பிரதிநிதித்துவம் அத்தியாவசியமானதாகும் என ரோசி சேனாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

## 'ஓம்' எனும் பிரணவம்

ஓம் என்பது சைவமக்களுக்குப் புனிதமானதும் தெய்வீகம் நிறைந்ததுமான மகா மந்திரம். ஓம் என்பது பிரணவ மந்திரம். உலகின் எல்லாப் பொருள்களையும் உள்ளடக்கிய குறியீடு ஆகும். ஓம் எனும் மகா மந்திரம் இறைவனை அணுகுவதற்கும் அடைவதற்கும் மிகச்சிறந்த வழியும் துணையும் ஆகக் கருதப்படுகிறது.

அநாதியில், ஒப்பற்ற பேரமைதியிலிருந்து இறைவனின் வாக்காகவும் ஒலி வடிவமாகவும் நாதப் பிரமம் தோன்றியது. அதுவே முதல் ஒலி ஆகும். அது ஓங்காரம். ஓம் எனும் ஒலியிலிருந்துதான் ஆகாயவெளி, காற்று, தீ. நீர், நிலம் எனும் பஞ்சபூதப் படைப்புக்கள் முழுவதும் வெளிப்பட்டன. இந்த வகையில் உலகின் படைப்புக்கள் முழுவதிலும் ஊடுருவிச் செறிந்துள்ளது. இந்த ஓங்காரம். அது படைப்பின் உயிர்த் தத்துவம் என்று கூறப்படுகிறது. ஓங்காரம் எல்லா உயிரிலும் பரவியிருக்கிறது என்பதால் அது பிரணவம் எனவும் அழைக்கப்படுகிறது. உயிர், பிராணன் என்னும் சொல்லினாலும் குறிப்பிடப்படுகிறது.

ஓங்காரத்தை உச்சரித்தல், வழிபடுதல் என்பன இறைவனை வழிபடுதலாகும். ஓம் என்ற பதம்தான் ஒப்பற்ற இறைவனின் உண்மை வடிவம். ஓங்காரத்தை மட்டும் உச்சரித்துக் கொண்டு பரம்பொருளைத் தியானிக்க வேண்டும் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. ஓங்காரத்தின் மகிமை இவ்வாறு பேசப்படுகிறது. ஓங்காரமே இறைவன். அதேவேளை இறைவனை அறிவதற்கான வழிமுறையும் அதுவாக உள்ளது என்று நூல்கள் கூறும்.

*(சைவ நற்சிந்தனைக் களஞ்சியம்)*

16ஆம் திகதி ஆரம்பம்

## நவராத்திரிச் சிறப்பு



நவராத்திரி விரதம் எதிர்வரும் 16ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகிறது. புரட்டாதி மாதத்து பூர்வபட்சம் எனப்படும் வளர்பி றை காலத்தின் பிரதமை திதி முதலாக நவமி திதி வரையிலான ஒன்பது நாட்கள் நவராத்திரி விரத காலமாகும்.



நவராத்திரி சக்தி விரதங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இது வீரத்திற்கு அதிபதியான துர்க்கா தேவியையும், செல்வத்திற்கு அதிபதியான இலட்சுமி தேவியையும், கல்விக்கு அதிபதியான சரஸ்வதி தேவியையும் நோக்கி ஒன்பது இரவுகள் அனுஷ்டிக்கப்படுவதாகும்.



நவராத்திரி இந்து மக்களின் விரதமாக மட்டுமல்ல, விழாவாகவும் சிறப்புப் பெறுகிறது. ஆலயங்களில் மட்டுமன்றி வீடுகள், பாடசாலைகள், தொழிலகங்கள் மற்றும் சமய கலை, கலாசார நிலையங்களிலும் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. கொலுவைத்தல், கும்பம் வைத்தல், அலங்கரித்தல், பூசை வழிபாடுகளுடன், பக்தி மற்றும் தோத்திரப் பாடல்களைப் பாடுதல் போன்றன நவராத்திரி விழாவின் சிறப்பு அம்சங்களாக விளங்குகின்றன.

பத்தாவது நாள் விஜயதசமி எனப்படும். இதனை வெற்றித் திருநாள் என்றும் சொல்வர். ஆதிபராசக்தி தேவி மகிடாசுரனை வதைத்த தினம் இது. மகிடம் என்பது தாமச குணமாகும். தாமச குணத்தைப் போக்கி சாத்வீக குணத்தைக் கொடுத்த நாளாக விஜயதசமி குறிப்பிடப்படுகிறது. அன்றைய தினம் எல்லா ஆயுதங்களுக்கும் ஓய்வு கொடுத்து ஆயுத பூஜை செய்யும் திருநாளாகும். பாடசாலையிலும் மாணவர்கள் விஜயதசமியை சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம். கல்வியைத் தொடங்கும் பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கும் நாளாகவும் இத்தினம் அமைகிறது.

விஜயதசமி தினத்தன்று அரச குடும்பத்தினர் வன்னி மரத்தடிக்குச் சென்று அம்மரத்தை பூஜை செய்வர். இதனையொட்டியே அன்றைய தினம் கோயில்களில் மானம்பு உற்சவம் நடைபெறுகிறது. வன்னிமரம் பாவத்தையும் சத்துருக்களையும் அழிக்கக்கூடியது என்று சொல்வதுண்டு. துர்க்கையின் உருவம் என்றும் மரத்தை வர்ணிப்பார்கள். பாண்டவர்கள் அஞ்ஞாதவாசத்தின்போது தங்களது ஆயுதங்களை வன்னிமரத்தின் பொந்தினுள் ஒழித்து வைத்துவிட்டு பின்னர் நாடு திரும்பி, போரின்போது பயன்படுத்தி வெற்றிபெற்றார்கள் என்பது வரலாறு. விஜயதசமியன்று ஆலயங்களில் நடைபெறும் மானம்பு உற்சவத்தின்போது வாழைமரத்தின் மடலில் வன்னிமர இலையை செருகிவைத்தே, அதனை வெட்டுவது வழக்கமாகும்.

நவராத்திரி வழிபாடு தொன்மை வாய்ந்தது. வட இந்தியாவில் இதனை தசரா பண்டிகை என அழைப்பர். சிவனுக்கு ஒரு இராத்திரி வழிபாடாக சிவராத்திரி விளங்குவது போல, சக்திக்கு ஒன்பது இராத்திரி வழிபாடாக நவராத்திரி முக்கியத்துவம் பெறுவதன் ஊடாக சக்தி வழிபாட்டின் மேன்மை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## விரத மகிமை

விரதம் என்பது பலவகையாலும் தம்மை ஒறுத்தல்: தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்தல் ஆகும். எந்த உயிர்களுக்கும் தீங்கு செய்யாமையும் விரதத்தின் ஓர் அங்கம். பசி வந்திடப் பத்தும் பறந்தாலும், ஒன்று நம்மை விட்டுப் பிரியாமல் அடம் பிடிக்கும். அந்த ஒன்றுதான் கோபம். விரதம் மேற்கொள்பவர்கள் பசியிருக் கிறார்கள். அதனால் கோபம் வந்து விடுகிறது. விரதத்தை மேற்கொள்பவர்கள் கோபத்தை ஆராதிக்கக் கூடாது:

தனித்து இருத்தல், பசித்திருத்தல், விழித்து இருத்தல் எல்லா விரதங்களுக்கும் உரியன. இம் மூன்றுமே அரிய செயல்கள் தான். பொதுவாகவே மனிதர்களால் விரும்பப்படாத செயற்பாடுகளே. தனித்து இருந்து இறைவனைச் சிந்தித்தல் விரதமாகும். பசித்திருந்தால் மனப்பக்குவம் ஏற்படும்: எனவே பசித்திருத்தல் விரதமாகும். விழித்து இருப்பதால், நம்மைத் தீயவை அணுகாமல் பார்த்துக் கொள்ளலாம். அதனால் விழித்திருத்தல் விரதமாகும்.

*(சைவ நற்சிந்தனைக் களஞ்சியம்)*

# சமய தீபம்

## வெற்றிலையின் மகத்துவம்



வெற்றிலை வெற்றியையும் மங்கலத்தையும் தருகிறது. இதனாலேயே வெற்றிலை வைத்து அழைப்பது என்னும் சம்பிரதாயம் ஏற்பட்டது. இந்துக்களின் வாழ்க்கையில் எதனையும் காரண காரியத்துடனேயே செய்து கொள்வார்கள். வெற்றிலையின் நுனியில் சரஸ்வதியும், நடுவில் இலட்சுமியும், காம்பில் மூதேவியும் விரும்பி வசிப்பார்கள். எனவே தான் இறைவனுக்கு வெற்றிலை படைக்கும் காலத்தில் காம்பை வெட்டி அகற்றி விடுவதுண்டு. வெற்றிலையை வாயில் போடும் போது காம்பை அகற்றி எறிந்து விட்டு நுனியைக் கிள்ளி கன்னத்தின் மேற்பகுதியில் ஒட்டிவிட்டு தாம்பூலம் தரிப்பார்கள். வெற்றிலையின் வடமொழிப் பெயர் தாம்பூலம் ஆகும். புத்தியை வளர்ப்பவள் சரஸ்வதி. எனவே மதியாகிய புத்தியைத் தருவது எனும் கருத்தில் கன்னத்தில் நுனி வெற்றிலையை ஒட்டிக்கொள்வார்கள்.

வெற்றிலை போடுவது என்றுதானே சொல்கிறோம். சாப்பிடுவது என்று யாரும் சொல்வதில்லையே. காரணம் என்னவென்றால் மங்கலப் பொருட்களையும் அலங்காரப் பொருட்களையும் போடுவது என்றுதான் சொல்லல் வேண்டும். இது நம் பண்பாடு ஆகும். சந்தனம், குங்குமம் போடுவது காப்பு, சங்கிலி, தோடு போடுவது என்றுதானே நாம் சொல்லிக்கொள்கிறோம்.

இந்துசமயத்தில் வெற்றிலை இல்லாத கிரியைகளோ சடங்குகளோ இருக்க முடியாது. ஆலய வழிபாடு மற்றும் வீட்டு வழிபாடுகளில் வெற்றிலை முக்கியத்துவமானது. சடங்குகளில் வருபவர்களை வரவேற்கும்போது வெற்றிலை பயன்படுத்தப்படுகிறது. குருவுக்கு, பெரியோருக்கு தெட்சணைக் காசு வழங்கும் போதும் மணமக்களுக்கு பணம் வழங்கும் போதும் இது உன்னுடைய வாழ்வில் வெற்றியாகட்டும் என்று வெற்றிலையில் வைத்து வழங்குகிறோம். சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் சுபநேரத்தில் வெற்றிலையில் பணமும் சிறிதளவு நெல் வைத்தும் கைவிசேடம் வழங்கும் போது வெற்றியுடன் வாழ்க்கையில் இலட்சுமி கடாட்சமும் தானியமும் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துவதாக அமைகிறது.

வீட்டிற்கோ, பாடசாலைக்கோ, வேறு நிறுவனங்களுக்கோ விருந்தினர் வரும்போது வெற்றிலை கொடுத்து வரவேற்பது இந்துக்களின் பண்பாடு ஆகும். உங்கள் வருகையால் உங்களுக்கும் எங்களுக்கும் வெற்றி கிட்டுகின்றது என்பதாகவே அது அமைகிறது.

*- சைவப்புலவர் மாவை கந்த சத்தியதாசன்*

# இவ்வார சமய நிகழ்வுகள்

**இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்**

12.10.2012 வெள்ளி: அருநந்தி சிவாச்சாரியார் குருபூசை
13.10.2012 சனி: சனிப் பிரதோஷ விரதம்/புரட்டாதி கடைசி சனி
14.10.2012 ஞாயிறு: கேதாரேஸ்வர விரதம்
15.10.2012 திங்கள்: அமாவாசை விரதம்/மஹாளய பட்ச முடிவு
16.10.2012 செவ்வாய்: நவராத்திரி விரத ஆரம்பம்
18.10.2012 வியாழன்: சதுர்த்தி விரதம்

**கிறிஸ்தவர்களுக்குரிய விசேட தினங்கள்**

15.10.2012 திங்கள்: அவிலாநகர் புனித தெரேசா நினைவுநாள்
17.10.2012 புதன்: அந்தியோக்கு புனித இக்னேசியஸ் நினைவு நாள்
18.10.2012 வியாழன்: நற்செய்தியாளர் புனித லூக்கா விழா

## கிறிஸ்தவ நற்சிந்தனை

பிறருக்காக ஒருபோதும் பிள்ளையாய் நில்லாதே
பிறர் கடனுக்காக ஒருநாளும் பிணையாய் நிற்காதே.
அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க உனக்கு ஒரு
வழியும் இல்லாதிருந்தால், நீ படுத்திருக்கையில்
உன் படுக்கையும் பறிபோய் விடுமன்றோ!

வளமுடன் இருக்கும் பாவிகளைப் போல் நீயும் இருக்க வேண்டும்
என்று ஏங்காதே. ஆண்டவரிடம் எப்போதும் அச்சம்
உள்ளவனாய் இரு. அப்பொழுது உன் வருங்காலம்
வளமானதாய் இருக்கும். உன் நம்பிக்கையும் வீண் போகாது!

ஆண்டவருக்கும் அரசனுக்கும் அஞ்சிநட. கிளர்ச்சி
செய்வாரோடு உறவு கொள்ளாதே, ஏனெனில் திடீரென்று
அவர்களுக்கு கேடு வரும். அந்த இருவரும் எத்தகைய
கேட்டை வருவிப்பார்கள் என்பது யாருக்குத் தெரியும்?

*(புனித விவிலியத்தின் நீதிமொழிகள் நூலிலிருந்து*
*தொகுப்பு: ரிஷானி அலோசியஸ்.*

## இஸ்லாமிய நற்சிந்தனை

யார் சுபஹ் தொழுகையை தொழாமல் உறங்குகிறரோ, அவர் உற்சாகத்தையும், வாழ்வில் பிரகாசத்தையும், அல்லாஹ்வின் அருளையும் சமூக உறவையும் இழந்து விடுகிறார். சமூகத்தின் மேம்பாடு சுபஹ் தொழுகையில்தான் தங்கியிருக்கிறது என்பது ஒரு பெரியாரின் கருத்து.

சுபஹ் தொழுகை இருதய நோயிலிருந்து பாதுகாப்பளிக்கிறது. அதாவது, அதிகாலை சுபஹ் தொழுகைக்காக தூக்கத்திலிருந்து விழிப்பது இருதய நோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு மிகச் சிறந்த வழியாகும். அதிகாலை விழிப்பு இருதயத்தின் நாளங்கள், நாடிகளைப் பலப்படுத்துவதுடன் அதனால் ஏற்படும் பக்க விளைவுகளையும் தடுக்கிறது.

யார் சுபஹ் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுகிறாரோ அவர் அன்றைய தினம் முழுவதும் அல்லாஹ்வின் பொறுப்பில் இருக்கிறார்.

*(இப்னுமாஜா)*

## திருக்குறள் அறிவுப் போட்டி - இல.03

*சரியான விடைகள்:*

1. கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
   திங்களைப் பாம்புகொண் டற்று (1146)
2. ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
   நாகம் உயிர்ப்பக் கெடும் (763)
3. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
   புலியின்தோல் போர்த்து மேய்ந் தற்று (273)
4. கொத்தாக மலர்ந்திருந்த போதிலும் மணம் கமழாத மலருக்கு
5. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை
   சான்றோன் எனக் கேட்ட தாய் (69)
6. உடம்பை மறைக்கும் அளவு அம்புகளால் புண்பட்டு நின்றாலும்
   யானை தன் பெருமையை நிலைநிறுத்தும். (597)
7. பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
   பிற்பகல் தாமே வரும். (319)
8. பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
   எழுபது கோடி உறும். (639)
9. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
   காடும் உடையது அரண் (742) 75ஆம் அதிகாரம்
10. கொல்லான் புலாலை மறுத்தானை (ஓர் உயிரையும்
    கொல்லாமல், புலால் உண்ணாமல் வாழ்கின்றவன்) (260)


கடந்த செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி வெளியாகிய மேற்படி போட்டிக் கேள்விகளுக்கு ஏராளமானவர்கள் விடைகளை அனுப்பியிருந்தார்கள். எனினும் எவரும் பத்துக் கேள்விகளுக்கும் சரியான விடைகளை அனுப்பிவைக்கவில்லை. பலர் எட்டுக் கேள்விகளுக்கும், அதற்கும் குறைவாகவும் சரியான விடைகளை எழுதியிருக்கிறார்கள். எனவே இம்முறை எவருக்கும் பரிசு வழங்கப்படவில்லை.




வானம் தெளிவாகவும் களங்க மற்றுமிருந்தது. வசந்தகால கோது மைப் பயிரும் சூரிய ஒளி யில் பளபளத்தன. பண்ணை இவ்வ ளவு அழகான, மகிழ்ச்சியூட்டும் பிரதேசம் என்பதை அவை இதற்கு முன் அவ்வளவு நன்றாக அறிந்த தேயில்லை. இவ்வளவும் தங்களு க்கே சொந்தமானவை என்பதை நினைத்துப் பார்த்தபோது அவற் றிற்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அப்போது க்ளோவரின் கண்களில் நீர் நிறைந்தது. அதன் சிந்தனை-களை அதனால் வாய் விட்டுச் சொல்ல முடிந்தால், அது என்ன சொல்லியிருக்கும்? பல வருடங் களுக்கு முன்பு மனித குலத்தை அழித்துவிடுவது என்று புரட்சிக் கோலம் பூண்ட விலங்குகள் இந்த நிலைமை எய்துவதற்காகவா இப்படித் தொடங்கினார்கள்?

அவர்கள் கொண்ட இலட்சியம் என்ன? நடந்திருப்பது என்ன? கிழட்டு தளபதி அன்று இரவு, புரட்சியைப் பற்றி பேசி, மிருகங்களைச் செயலுக்குத் தூண்டியது. இந்த பயங்கர நிகழ்ச்சிகளும் பலிகளும் உயிர்க் கொலைகளும் நிகழுவதற்காகவா? இல்லவே இல்லை! எதிர்காலம் பற்றி க்ளோவர் அப்போது தன்மனதில் எவ்வாறு உருவகப்படுத்திக் கொண்டி ருந்தது? அநியாயமும் பட்டினியும் அற்ற ஒரு சமூகத்தை அது கற்பனை செய்து பார்த்தது. மிருகங்கள் எல் லாம் ஒன்றுக் கொன்று சரிநிகர் சமானமாக, தோளோடு தோள் நின்று சுதந்திரமாக இருக்கும் ஒரு நிலையை எண் ணிப் புரட்சி யில் இறங்கி யது அது. பலசாலிகள் பலமற்றதைக் காப்பாற்றும், ஒவ்வொன்றும் அதனதன் சக் திக்கேற்றபடி வேலை செய்யும், அதனதன் பசிக் கேற்றபடி உணவு உட்கொள்ளும். அன்று, கிழட்டு தளபதி பேசிய போது, தன் கால-டியில் உட் கார்ந்துகொண்டு அப் பிரசங் கத்தைக் கேட்ட வாத்துக் குஞ்சுகளின் ஞாபகம் வந்தது க்ளோவருக்கு. அம்மாதிரி பலமுள்ளவர்கள் பலமற்றவர்க ளைக் காப்பாற்ற வேண்டும். ஏன் இப்படியெல்லாம் நடந்தது என்ற க்ளோவருக்கு தெரியவில்லை. லட்சிய பூமிக்குப் பதில், ரத்தக் காடாக நாற்றமெடுக்கும் பண்ணை யாக மாறிவிட்டதே இன்று! மன திலிருந்ததை உரக்கச் சொல்லத் தைரியமில்லாமல் மிருகங்கள் நடமாட வேண்டியதாகிவிட்டதே!

பண்ணையிலே சுதந்திரமாகத் திரிந்தவை, உறுமிக்கொண்டும் பயமுறுத்திக் கொண்டும் திரிந்த அந்த நாய்கள்தான். வேறு யாரு மில்லை, தன் எதிரிலேயே தனது நண்பர்கள் குற்றவாளிகள் என்று தண்டிக்கப்பட்டதைப் பார்க்கும்படி வந்துவிட்டதே! உன் தோழர்கள் என்னதான் குற்றம் செய்திருந்தா லும் உன் கண்ணெதிரிலேயே கொல்லப்படுவது என்பது சகித்துக் கொள்ளக்கூடிய காட்சியா? புரட்சி என்கிற சிந்தனையோ, எதிர்த்து எழுவது என்கிற சிந்தனையோ, க்ளோவரின் மனதில் இல்லவே இல்லை. **(திங்கள்)**





# சிறுவர் அமுதம்

## - குயில் அக்கா
## - காக்கா அண்ணன்
## - ஆந்தையார்

கற்பூரவள்ளி என்ற காட்டில் ஆந்தை குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. குஞ்சுகள் ஒரு நாள், "அம்மா எல்லாரும் பகலில்தான் சுறுசுறுப்பாக உலாவிக் கொண்டிருக்கின்றனர். நாம் மட்டும் பகலில் தூங்கிவிட்டு இரவில் இரை தேடுகிறோம். இது ஏன்?" என்றன.

"நமக்கு பகலில் கண் தெரியாது. இரவில்தான் தெரியும். அதனால் தான் நாம் இரவில் சென்று இரை தேடுகிறோம்" என்றது தாய்




ஆந்தை.

"ஏனம்மா கடவுள் நம்மை மட்டும் இப்படி படைத்துவிட்டார்?"

"கடவுள் நம்மையெல்லாம் ஒரே மாதிரிதான் படைத்தார். நம்முடைய முன்னோர்களில் ஒருவர் செய்த தவறைத்தான் நாம் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்," என்றது தாய் ஆந்தை.

"அப்படி என்ன தவறு செய்தார்?"

"நம் முன்னோர் ஒருவர் காகம் ஒன்றிடம் மிகவும் நட்பாக இருந்தார். ஒரு நாள் அந்த காகத்திற்கு உடல்நிலை மிகவும் சரியில்லை. எனவே, அதை அழைத்துக் கொண்டு காட்டில் டாக்டராக இருந்த குயிலாரிடம் சென்றது"

"குயில் டாக்டரோ நன்றாக வைத்தியம் பார்த்து காக்காவை குணமாக்கிவிட்டது. ஆனால், இவர்கள் பணம் கொடுக்கவில்லை. எனவே, குயில் டாக்டர் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுங்கள் என்று கேட்டது"

"இவர்கள் இருவரும் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்லிவிட்டு ஓடி வந்துவிட்டனர். அதன் பிறகு இவர்கள் இருவரையும் பார்க்கும் பொழுதெல்லாம் பணம் கேட்க ஆரம்பித்தது குயில் டாக்டர். ஆந்தையார், பகலில் தலைகாட்டுவதே இல்லை. இரவில் மட்டுமே வெளியே வந்தார்"

"இப்படியே இருந்ததால் ஆந்தையாரை கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் ஆத்திரமடைந்த குயில் டாக்டர், காக்காவை பிடித்து திட்டியிருக்கிறது"

அந்த திருட்டு காக்காவும் அவரது காசைக் கொடுக்கவில்லை. இதனால் கோபம் கொண்ட குயில் டாக்டர், "இனிமேல் எங்கள் இனத்தார் இடும் முட்டைகளை எல்லாம் உன் இனத்தார் தான் காவல் காக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டது.

"அன்றிலிருந்து குயில் இனத்தார் காக்கையின் கூட்டிலேயே முட்டை இட்டனர்"

"பகலில் தூங்கி தூங்கியே நமக்கு பகலில் கண் தெரியாமல் போய்விட்டது" என்றது தாய் ஆந்தை.

"அம்மா பிறரை ஏமாற்றுவதால் ஏற்படும் கஷ்டம் புரிகிறது. நாங்கள் இப்படிப்பட்ட காரியத்தை செய்யவே மாட்டோம்," என்றனர்.

தன் குஞ்சுகளை அணைத்து முத்தமிட்டது தாய் ஆந்தை.

## தகவல்கள்

1. பருமனான கம்பி அல்லது மெல்லிய கம்பி இவற்றில் அதிக சுருதியை ஏற்படுத்த எந்த வகைக் கம்பி பயன்படுத்தப்பட வேண்டும்?
   மெல்லிய கம்பி பயன்படுத்தப்பட வேண்டும்.

2. சுரமானி என்றால் என்ன?
   இழுத்துக் கட்டப்பட்டுள்ள கம்பிகளின் அதிர்வுகளைக் கண்டறியப் பயன்படும் கருவி சுரமானி என்பதாகும்.

3. தண்ணீரில் மூழ்கும் இரும்புக் குண்டு பாதரசத்தில் மிதப்பது ஏன்?
   தண்ணீரின் அடர்த்தி எண் இரும்புக் குண்டின் அடர்த்தி எண்ணைக் காட்டிலும் குறைவு. எனவே இரும்பு குண்டு நீரில் மூழ்குகிறது. பாதரசத்தின் அடர்த்தி எண் இரும்புக் குண்டின் அடர்த்தி எண்ணைவிட அதிகம். எனவே பாதரசத்தில் இரும்புக் குண்டு மிதக்கிறது.

4. மனித உடலில் உள்ள இரத்தத்தின் வகைகள் யாவை?
   இரத்தத்தை நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை A, B, AB, O என்பனவாகும்.

5. நமது எடையில் இரத்தத்தின் எடை என்ன விகிதத்தில் உள்ளது?
   நமது உடலின் எடையில் இரத்தத்தின் எடை 9% ஆகும்.

6. நீராவி இயந்திரத்தைக் கண்டறிந்தவர் யார்?
   சேர் ஜேம்ஸ்வாட் என்பவர் நீராவி இயந்திரத்தைக் கண்டறிந்தார்.

**சுடோக்கு எண் 71 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 9 | 4 | 2 | 8 | 1 | 3 | 6 |
| 1 | 3 | 8 | 6 | 5 | 9 | 4 | 7 | 2 |
| 4 | 2 | 6 | 1 | 3 | 7 | 9 | 8 | 5 |
| 6 | 1 | 4 | 9 | 7 | 5 | 3 | 2 | 8 |
| 3 | 9 | 7 | 8 | 4 | 2 | 6 | 5 | 1 |
| 2 | 8 | 5 | 3 | 6 | 1 | 7 | 4 | 9 |
| 7 | 4 | 1 | 5 | 8 | 6 | 2 | 9 | 3 |
| 9 | 5 | 2 | 7 | 1 | 3 | 8 | 6 | 4 |
| 8 | 6 | 3 | 2 | 9 | 4 | 5 | 1 | 7 |

**சுடோக்கு எண் 72**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 6 | 8 | |
| 4 | | | | | | | | 5 |
| | 8 | 3 | | 6 | | | | |
| | 6 | | 5 | 8 | | 7 | 3 | |
| 8 | | | 4 | | 9 | | | 6 |
| | 1 | 7 | | 2 | 3 | | 9 | |
| | | | | 4 | | 8 | 1 | |
| 2 | | | | | | | | 9 |
| | 7 | 8 | | | | | | |

# யாழ். மாநகர ஆணையாளர் இடமாற்றம் அநீதியானது

## - யாழ். மாநகரசபை உறுப்பினர் கண்டனம்

"யாழ் மாநகரசபையின் ஆணையாளர் எஸ். பிரணவநாதன் அவர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மாநகரசபை ஆணையாளராக நியமனம் பெற்று வந்த பின்பு எந்தவொரு முன்னறிவித்தலு மின்றி, திடீரென அதிரடியாக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சுக்கு இடமாற்றப்பட்ட நிகழ்வானது மாநகரசபை உறுப்பினர்கள், மாநகரசபை உத்தியோகத்தர்கள். மக்கள் ஆகியோரை அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாக்கியுள்ளது.

இவ்வாறு தமிழ்தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

அண்மைக்காலமாக வடமாகாணத்தில் திணைக்கள அதிகாரிகளை இப்படித் திடீரென இடமாற்றம் நிகழ்வுகளால் துறைசார் திணைக்கள அதிகாரிகள் மத்தியில் இப்போது குழப்பநிலையும் அச்சநிலைமையும் ஏற்பட்டு வருகின்றது. இவற்றை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். திரு.எஸ். பிரணவநாதன் அவர்கள் ஆணையாளராகப் பொறுப்பேற்ற பின்பு மாநகர உள்ளகத் துறைசார் திணைக்களங்களுக்கு அதிகாரங்களை உரிய முறையில் பகிர்ந்தளித்து அவர்களின் சுதந்திரமான நீதியான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து வந்தவர்.

எல்லோராலும் விரும்பப்படும் ஓர் நேர்மையான அதிகாரியாக மதிக்கப்பட்ட ஆணையாளர் அவர்கள் ஏற்கனவே உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பதவி வகித்து பின்பு ஆணையாளராக நியமனம் பெற்றவர். இவரது சேவை, திறமை, தகுதி அடிப்படையில் பெற்று வந்த புள்ளிகளின் அடிப்படையில் இவர் ஜப்பான் நாட்டுக்குச் சென்று புலமைப்பரிசிலில் தோற்றுவித்து பட்டம் பெறும் வாய்ப்பும் கிட்டியிருந்தது. அது இப்போது ஒரு பெரும் பான்மையினத்தைச் சேர்ந்த அதிகாரிக்குக் கைமாறும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

நான் ஒரு மாநகரசபை உறுப்பினர் என்ற ரீதியிலும், மக்கள் பிரதிநிதி என்ற வகையிலும் ஒரு தமிழன் என்ற நிலையிலும் மாநகர ஆளும் தரப்பிடம் பகிரங்கமாகக் கோருவது என்னவென்றால் ஆணையாளரின் சேவையின் தேவை கருதியும் மாநகர ஆணையாளர் என்ற பதவியூடாக ஜப்பான் நாட்டில் கிடைக்கப்பெற்ற திண்ம கழிவு முகாமைத்துவக் கற்கைநெறி மூலம் புலமைப்பரிசிலில் தோற்றுவித்துப் பட்டம்பெற்று அதனூடாக இன்னும் மாநகரசபைக்கு வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை ஆணையாளர் விரிவுபடுத்தி முன்னெடுக்க வாய்ப்பளிக்கும் முகமாக இவருக்கான பயிற்சிநெறியை மேற்கொள்ள இவரை உடனடியாக மீளவும் ஆணையாளராக நியமிப்பதற்கு ஆளும் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

# மானிப்பாயில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு

(சண்டிலிப்பாய்)

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உயிர் கொல்லி நோயாகிய டெங்கு நோயினையும் அதனை பரப்பி வரும் டெங்கு நுளம்பினையும் முற்றாக ஒழிக்கும் நோக்குடன் பல்வேறு தரப்பினரும் இணைந்து கூட்டாக இந்த டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக தெரிகின்றது.

டெங்கு ஒழிப்பு செயற்பாட்டில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புக்கள் சமுர்த்தி செயலணிகள், பொலிஸ் பிரிவினர் இராணுவத்தினர், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பல தரப்பட்ட தரப்பினரும் கிராமங்களின் மூலை முடுக்குகள் எல்லாம் சென்று விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இவ் செயற்பாடுகளிற்கு மக்கள் அனைவரும் தமது ஆதரவினை தருவதுடன் அனைவரும் ஒன்றிணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

# சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வு நாடகம்

(சண்டிலிப்பாய்)

சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் நோக்கில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினர் விழிப்புணர்வு நாடகங்களை பாடசாலைகளில் அரங்கேற்றி வருகின்றனர். சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றம் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டதாரிப் பயிலுனர்கள் ஆகியோர் இணைந்து சிறுவர்களிற்கு விழிப்புனர்வுகளை ஏற்படுத்தும் முகமாக சிறுவர் துஷ்பிரயோகங்கள் எவை என்பதனை எடுத்துக்காட்டி, அது யார் யாரால் பெரும்பாலும் நடாத்தப்படும் என்பனவற்றையும் அதனை சிறுவர்கள் எவ்வாறு தடுக்க வேண்டும் என்பன தொடர்பாக விரிவான நாடகம் தயாரிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

# சண்டிலிப்பாயில் முதியோர் தினம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சர்வதேச முதியோர் மற்றும் மாற்றுத்திறன் உடையோர் தின நிகழ்வானது நாளை மறு தினம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன் தலைமையில் இடம்பெறும் இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற யாழ்.மாவட்ட நீதிபதியும் வடமாகாண சத்திய சேவா நிலையத் தலைவருமாகிய இ.வசந்தசேனன் அவர்கள் கலந்து சிறப்பிக்க உள்ளார்.சிறப்பு விருந்தினராக சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி இ.நளாயினி அவர்களும், கௌரவ விருந்தினர்களாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மலகொம் பேற் அவர்களும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் கு.விமலன் அவர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

# கழுகுக் கண்கள்

சமீபத்தில் அலரி மாளிகைக்கு சென்றிருந்த நான் பார்த்து ரசித்த அனுபவங்களை இங்கு நான் தருகின்றேன்.

அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் ஊடாக மீண்டுமொரு தடைவ எல்.ரி.ரி.ஈ. இன் இலட்சியக்கனவை நிறைவேற்றுவதற்கான நாச வேலைகளில் இறங்கியிருப்பதாகவும், இதற்கு வெளிநாட்டில் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் தங்கள் கைவசம் உள்ள எல்.ரி.ரி.ஈ. பணத்தை வீசி எறிகிறார்கள் என்றும் அரசாங்கத்திற்கு இப்போது நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன.

30 ஆண்டுகால யுத்தத்தில் தாங்கள் அடைய முடியாத நாச வேளைகளை இவ்விதம் மனித உரிமை போராட்டங்களின் ஊடாக அடைவதற்கு எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் முக்கிய ஆதரவாளர்கள் தற்போது தீவிரமாக செயற்பட்டு வருவது குறித்து, அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்திருப்பதாக நாட்டுத்தலைவர் தெரிவித்துள்ளார். ஏந்த சக்திகள் அரசுக்கு எதிரான சதி முயற்சிகளை மேற்கொண்டாலும் அவற்றுக்கு அரசாங்கம் முகம் கொடுக்கத் தயாராக இருக்கின்றது. முக்களின் இறையாண்மையில் கைவைக்க எவருக்கும் உரிமையில்லை.

அலரி மாளிகையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற, அரசியல் பிரமுகர்களுடன் 2013 ஆண்டு வரவு செலவு திட்டத்தை தயாரிக்கும் கூட்டத்தில், நாட்டின் உள்ளூராட்சி மன்ற அரசியல்வாதிகளுக்கு மகத்தான பொறுப்பு உண்டு என்று கூறினார். இவர்கள் தமது மாகாணத்திற்கும், நாட்டுக்கும் சிறந்த பொருளாதாரத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு பாடுபட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

நாம் மனிதர்களுக்கு மட்டுமன்றி மிருகங்களுக்கும் எம்மாலான சகல உதவிகளையும் செய்ய வேண்டுமென்ற கருத்தையும் வலியுறுத்தினார். உணவும், தண்ணீரும் தேடி வரட்சி கோரத்தாண்டவம் ஆடும் காலத்தில் யானைகள் போன்ற காட்டில் வாழும் மிருகங்கள் அயலில் உள்ள கிராமங்களை முற்றுகையிட்டு, பயிர்களை அழித்து வீடுகளையும் தாக்குவதுடன் சில சந்தர்ப்பங்களில் வகையாக மாட்டிக்கொள்ளும் மனிதர்களையும் கொன்று விடுகிறது.

யானைகள் மனிதர்களைப் போன்ற ஆறறிவை உடையவையல்ல. எனவே, தான் மற்றவர்களுக்கு தீங்கு செய்கிறேன், மற்றவர்களின் உடமைகளை அழித்துவிடுகிறேன், மற்றவர்களை அநாவசியமாக கொன்று விடுகிறேன் என்று உணர்ந்து கொள்ள முடியாத நிலையிலேயே யானைகள் இவ்விதம் நடந்து கொள்கின்றன. ஆகவே, அவற்றுடன் மனிதர்கள் மிருகத்தனமாக நடந்து கொண்டு அவற்றை துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்தியும் கற்கலால் எரிந்து காயப்படுத்தியும் துன்புறுத்தலாகாது.

எனவே, வனவிலங்கு சரணாலயங்களில் உள்ள யானைகள் அவற்றை அண்டியுள்ள கிராமங்களுக்குள் ஊடுறுவி செல்வதை தடுப்பதற்கு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவசியமானால் சரணாலயங்களை சுற்றி போடப்பட்டுள்ள மின் வேலிகளை புனரமைப்பு செய்து அவற்றை செயற்படுத்த வேண்டுமென்றும் நாட்டுத்தலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன் யானைகளின் தொல்லையை எதிர்நோக்கும் சகல வீடுகளையும் அரசாங்க நிதியால் காப்புறுதி செய்யும் திட்டத்தை ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார். ஊடவளைவை பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்ட புகார்கள் தொடர்பாகவே இந்த உத்தரவை பிறப்பித்தார்.

நாட்டு மக்களிடையே சமூகப் பொறுப்பு இல்லாதிருப்பதனால் தான் இன்று சிறுபிள்ளைகள் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுதல், பெண்கள் தனியாக ஒரு வீட்டில் தங்கியிருப்பதற்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுதல் போன்ற சமூகப் பிரச்சினைகள் நாளாந்தம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இப்பிரச்சினைகளை ஓர் அரசாங்கத்தினாலோ எவ்வளவு பெரிய எண்ணிக்கையுடைய பொலிஸ் படையினாலோ தீர்த்து வைக்க முடியாது. பொதுமக்களின் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் இருந்தால் மாத்திரமே இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றை நாட்டில் ஏற்படுத்த முடியும். சமீபத்தில் அரசாங்கத்தின் நற்பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தக்கூடிய வகையில் ஓரிரு முக்கியஸ்தர்களை சில சமூக விரோதிகள் வீதியில் வைத்து தாக்கிவிட்டு தப்பியோடி விடுகிறார்கள். இந்த சம்பவங்கள் தொடர்பான முழுப் பொறுப்பையும் அரசாங்கத்தின் மீது சில விஷமிகள் சுமத்தி இந்த தாக்குதல்களுக்கு அரசாங்கமே பொறுப்பு என்று கூறி அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளையும் சுமத்தவும் தயங்குவதில்லை.


ஓர் அரசாங்கத்தினால் நாட்டில் உள்ள சகல பிரஜைகளுக்கும் ஒவ்வொரு பொலிஸாரை நியமித்து அவர்களுக்கு பாதுகாப்பை அளிப்பது சாத்தியமற்ற விடயமாகும். ஆயினும் தங்களுக்கு உயிர் ஆபத்து இருக்கிறது என்று ஆதாரபூர்வமாக முறைப்பாடு செய்பவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளிக்க என்றுமே தயங்குவதில்லை.

இந்த விடயத்தில் நாம் இயற்கை நீதியைப் பற்றி மக்களுக்கு ஞாபகப்படுத்துவது பொருத்தமாக இருக்கும். இயற்கை நீதிக்கு அமைய ஒரு நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் பொலிஸ் உத்தியோகத்தரைப் போன்று சட்டத்தை அமுலாக்கும் அதிகாரம் இருக்கின்றது. இதனால் தான் ஒருவரை இன்னொருவர் கொலை செய்ய முயற்சிக்கும் போது அவரை காப்பாற்றுவதற்கு வேறொருவர் முன்வந்து நடத்தும் சண்டையில் மற்றவர் இறந்துவிட்டாலும் அது வேண்டுமென்றே செய்யப்பட்ட கொலை அல்லவென்று நீதிமன்றத்தில் நிரூபித்துக் காட்டினால் அந்த சம்பந்தப்பட்டவர் இயற்கை நீதியின் படி நிரபராதியாக காணப்பட்டு விடுவிக்கப்படுவார்.

சட்டம் ஒவ்வொரு பிரஜைக்கும் தற்பாதுகாப்பிற்கும் மற்றவர்களை பாதுகாப்பதற்கும் உரிமையை கொடுத்திருக்கின்ற போது எல்லா சந்தர்ப்பத்திலும் இந்த உரிமையை பொதுமக்கள் பயன்படுத்தாமல் கூடிய வரையில் குற்றமிழைத்தவர்கள் பற்றிய முறைப்பாடுகளை பொலிஸாருக்கு அறிவித்து அவர்களை கொண்டே மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு வகை செய்ய வேண்டும். இதன்மூலமே ஒரு நாட்டில் மக்கள் அமைதியாகவும், சமாதானமாகவும் வாழ்வதற்கான சாதகமான ஒரு சூழ்நிலை உருவாகும்.

அடிக்கடி அலரிமாளிகைக்கு சென்றால் நல்ல விசயங்களை கிரகித்துக் கொள்ளலாம் என்று கழுகுக் கண்கள் நம்பிக்கை வைத்துள்ளது.

# பொருளாதார தடைகளை முறியடிப்போம்: ஈரான் தலைவர் அயதுல்லா காமினி



பொருளாதார தடை என்பது எங்கள் நாட்டின் மீது தொடுத்துள்ள யுத்தம், இதை முறியடிப்போம் என ஈரான் தலைவர் அயதுல்லா காமினி தெரிவித் துள்ளார்.

ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரித்து வருகிறது என அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய நாடுகள் குற்றம் சுமத்தி உள்ளதுடன், அந்நாட்டின் மீது பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

மேலும் ஈரானிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யவும் மற்ற நாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஈரானின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், அந்நாட்டு நாணயத்தின் மதிப்பு 40 சதவிகிதம் சரிந்து விட்டது.


இதுகுறித்து ஈரான் தலைவர் அயதுல்லா காமினி கூறுகையில், ஈரான் மீது ராட்சத தனமான பொருளாதாரத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

இஸ்லாமிய புரட்சி உருவான 79ஆம் ஆண்டிலிருந்தே ஈரான் பொருளாதாரத் தடைக்கு இலக்காகி விட்டது.

அணு ஆயுதங்கள் தயாரிக்கப் படவில்லை என பலமுறை மறுத்தும், சந்தேகப்படும் ஐரோப்பிய நாடுகள் நம் நாட்டின் மீது பொருளாதார தடையை அமல்படுத்தியுள்ளது முட்டாள் தனமானது.

சொல்லப்போனால் இந்த பொருளாதாரத் தடை ஈரான் மீது தொடுக்கப்பட்ட போர் தான். இதை நாம் வெற்றி கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்.

# சிரியாவின் பயணிகள் விமானத்தை வலுக்கட்டாயமாக தரையிறக்கியது துருக்கி



சிரியாவுக்கு சொந்தமான பயணிகள் விமானத்தை இடைமறித்து, அதிலிருந்த தகவல் தொடர்பு சாதனங்களை துருக்கி பறிமுதல் செய்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சிரியா இராணுவம் கடந்த 3ஆம் திகதி எல்லையில் நடத்திய துப்பாக்கி சூட்டில் துருக்கியில் 5 பேர் உயரிழந்தனர்.

இதற்கு பதிலடியாக துருக்கி பீரங்கி தாக்குதலை நடத்தியது. இதனைத் தொடர்ந்து இருநாடுகளிடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டது.


தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தினால் தக்க பதிலடி கொடுப்போம் என துருக்கி அறிவித்திருந்தது. மேலும் தங்கள் விமான நிலையத்தின் வழியாக எந்த ஆயுத தளவாடங்களும் செல்ல விடக்கூடாது என அரசு முடிவெடுத்திருந்தது.

இந்நிலையில் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவிலிருந்து சிரியா தலைநகர் டமாஸ்கஸ் நோக்கி ஏ 320 ஏர்பஸ் விமானம் சென்றது.

180 பேர் பயணிக்கக் கூடிய சிரியாவிற்கு சொந்தமான இந்த விமானத்தில் 33 பயணிகள் மட்டுமே இருப்பதாகவும் அதில் ஆயுதங்கள் கடத்தப்படலாம் என்று தகவல்கள் வெளியானதையடுத்து, இந்த விமானத்தை துருக்கி போர் விமானங்கள் இடைமறித்து அங்காராவில் இறக்கின.

இந்த விமானத்திலிருந்த இராணுவத் தகவல் தொடர்பு சாதனங்கள் பறிமுதல் செய்யப் பட்டு பின்னர் அங்கிருந்து செல்ல அனுமதிக்கப்பட்டது என்றுதுருக்கி அரசு கூறியுள்ளது.

# வெடிகுண்டுடன் விமானத்தில் பயணித்த ஜப்பானியர் அமெரிக்காவில் கைது



விமானத்தில் கையெறி குண்டை எடுத்து சென்ற ஜப்பானியர் அமெரிக்காவில் கைது செய்யப் பட்டார்.

அமெரிக்காவில கடந்த 2001 ஆம் ஆண்டில் நடந்த தாக்குதல் சம்பவத்துக்கு பிறகு விமான பயணிகள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

நகம் வெட்டி, கத்தரிகோல், சிறு கத்திகள் உள்ளிட்ட பொருட்கள் விமானத்தில் எடுத்து செல்ல தடை விதிக்கப்பட்டுள் ளது.

விமானத்தை தகர்க்க சதி செய்யும் பயங்கரவாதிகள் திரவ வடிவில் வெடிமருந்துகளை உடலில் மறைத்து எடுத்து செல்ல முயற்சி செய்கின்றனர்.

இது தொடர்பாக ஏற்கனவே, இரண்டு பேர் கைது செய்யப் பட்டனர். ஜப்பானை சேர்ந்த யோங்டா "ஹயாங் ஹாரிஸ் (வயது 28) என்ற நபர் 5ஆம் திகதி லாஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்துக்கு வந்திறங்கிய போது அவர் குண்டு துளைக்காத உடை அணிந்திருந்தார்.

தீயினால் பாதிக்காத பேன்ட் போட்டிருந்தார். புகையை கிளப்பும் கையெறி குண்டும், விஷவாயுவிலிருந்து காத்துக் கொள்ளும் முகமூடியும் உள்ளிட்டவைகளை வைத்திருந்தார்.

சந்தேகம் அடைந்த விமான ஊழியர்கள், அவரை பொலிசிடம் ஒப்படைத்தனர். பொலிசார் விசாரணை நடத்தவும் ஒத்துழைக்கவில்லை.


ரகசிய இடத்தில் விசாரணை நடத்தினால் எதையும் சொல்ல முடியாது. பகிரங்கமாக விசாரணை நடத்தினால் விசாரணைக்கு ஒத்துழைக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

அமெரிக்க குடியுரிமை பெற்ற ஹாரிஸ், பாஸ்டன் நகரில் வசித்து வந்தார். தற்போது அவர் ஜப்பானில் வசிக்கிறார்.

தடை செய்யப்பட்ட ஆயுதங்களை விமானத்தில் கொண்டு வந்ததற்காக அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் ஐந்தாண்டு வரை அவருக்கு சிறை தண்டனை அளிக்கப்படும்.

# உலக பார்வை

## பொப் ஆண்டவர் முதன் முறையாக அரபு மொழியில் பிரார்த்தனை



போப் ஆண்டவர் 16ஆம் பெனடிக்ட் முதன் முறையாக அரபு மொழியில் பிரார்த்தனை செய்துள்ளார்.

வாடிகனில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் சுமார் 20,000 ஆயிரம் பேர் கூடியிருந்தனர். அவர்களை போப் 16ஆம் பெனடிக்ட் முதன் முறையாக அரபு மொழியில் ஆசிர்வதித்தார்.

போப்பின் ஆசிர்வாதத்தை பி'ப் ஒருவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவர் கூறுகையில், அரேபிய பார்வையாளர்களுக்காக போப் இப்போது பிரார்த்திக்கிறார். உங்கள் அனைவரையும் ஆண்டவர் ஆசிர்வதிக்கட்டும் என்று தெரிவித்தார்.

அதன் பின்னர் பேசிய போப், 50 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வழிகாட்டு குழு தற்போதும் அனைத்து பிரச்னைகளின் மத்தியிலும் கத்தோலிக்க சபைகளுக்கு ஒரு வழிகாட்டியாக திகழ்வதாக தெரிவித்தார்.



சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி ரோத்தம் கிளிண்டன். அருகில் ஆர்ச் பிஷிப் டெஸ்மாண்ட் டுடு.

## மக்கள் போராட்டம்:

## கென்யாவில் எம்.பி.க்களுக்கு அதிகளவு போனஸ்:



கென்யாவில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போனஸ் அறிவிக்கப்பட்டதை கண்டித்து மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஆப்ரிக்க நாடுகளிலேயே கென்யா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தான் சம்பளம் அதிகம். ஒவ்வொரு நபரும் 5.7 லட்ச ரூபாய் மாத சம்பளமாக பெறுகின்றனர்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் கென்ற நாடாளுமன்றத்தில் 222 இடங்களுக்கான தேர்தல் நடக் கிறது.

இந்நிலையில் உறுப்பினர்களுக்கு போன்ஸ் அளிக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொருவருக்கும் 60 லட்ச ரூபாய் போனசாக கிடைக்கும்.

கென்யாவில் பள்ளி ஆசிரியர்களுக்கு போதிய சம்பளம் அளிக்கப்படாததை கண்டித்து, கடந்த மாதம் மூன்று வாரங்கள் பள்ளிகள் மூடப்பட்டிருந்தன.

இதே போன்று சுகாதாரத்துறை ஊழியர்களுக்கும்சம்பளம் அளிக்கப்படுவதில்லை. இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போனஸ் அளிக்கும் திட்டம் மக்களிடையே கோபத்தை ஏற்படுத்தி உள்ளன.

இதனை கண்டித்து ஏராளமான மக்கள் நைரோபி நகரில் ஜனாதிபதி மாளிகைக்கு எதிராக போராட்டம் நடத்தினர்.

# அப்பாவிகளை எந்த வகையிலும் துன்புறுத்தக்கூடாது

## - பிரதமர் மன்மோகன் சிங்

ஊழல் செய்தவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கும் அதே சமயம் அப்பாவிகளை எந்த வகையிலும் துன்புறுத்தக் கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

மத்திய புலனாய்வுத் துறை (சிபிஐ) மற்றும் மாநில ஊழல் தடுப்புப் பிரிவுகளின் 19வது மாநாட்டை தலைநகர் புதுடெல்லியில் பிரதமர் மன்மோகன் சிங் தொடங்கி வைத்தார்.

இம்மாநாட்டில் பேசிய பிரதமர், இந்தியப் பொருளாதாரம் சர்வதேச பொருளாதாரத்துடன் ஒருங்கிணைந்து செயற்படும்போது அதன் வளர்ச்சிக்குத் தக்கவாறு ஊழல் தடுப்பு அமைப்புகளும் சவால்களை சந்திக்கின்றன.

பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கும்போதும் அமல்படுத்தும்போதும் பல்வேறு நுட்பமான பிரச்னைகள் எழுவதனால் பல வழக்குகளில் நமது ஊழல் தடுப்பு அமைப்புகளால் சரியான தீர்வை எட்ட முடிவதில்லை.

அதனால் புதிய வடிவில் தோன்றும் ஊழலைத் தடுக்கப் புலனாய்வு அமைப்புகள் அவற்றின் திறனையும் உத்திகளையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.


சிறப்புமிகு சிபிஐ(மத்திய புலனாய்வு அமைப்பு) பயிற்சியகத்தில் மாநில ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளும் பயிற்சி பெற வேண்டும்.

சிபிஐயும் மாநில ஊழல் தடுப்புப் பிரிவுகளும் சேர்ந்து பணியாற்றுவதால் பரஸ்பரம் அவற்றின் திறன் மேம்படும்.

பல ஊழல் வழக்குகளில் பணம் கொடுத்தவர், சட்டத்தின் வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தப்பித்து விடுகிறார். அதைத் தடுக்கவும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்.

ஊழலை ஊக்குவிக்கும் வகையில் தவறான வழிகளில் தனியார் நிறுவனங்கள் தங்களது காரியங்களை சாதித்துக் கொள்வதையும் குற்ற நடவடிக்கையின் கீழ் கொண்டு வர பரிசீலித்து வருகிறோம்.

நேர்மையான அரசு அலுவலர்களைப் பாதுகாத்து நிர்வாகத் திறனை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.



ஊழலை ஒடுக்கும் நடவடிக்கையில் எதிர்மறை சிந்தனை, தோல்வி மனப்பான்மை போன்றவை எந்தப் பலனையும் அளிக்காது. அவை நமது நாட்டின் மதிப்பைத்தான் குலைக்கும்.

ஊழல் செய்தவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கும் அதே சமயம் அப்பாவிகளை எந்த வகையிலும் துன்புறுத்தக் கூடாது என்பதை பலமுறை நான் வலியுறுத்தி வந்துள்ளேன். அதை இங்கு மீண்டும் நினைவூட்டுகிறேன் என்றார் பிரதமர் மன்மோகன் சிங்.

# ஓட்டுநரின் கவனக்குறைவால் வான் மோதி 3 வயது சிறுமி பரிதாபமாக சாவு

தனியார் பள்ளிக்கூட வான் மோதி, அதே பள்ளியில் படிக்கும் 3 வயது சிறுமி பரிதாபமாக இறந்த சம்பவம் மீண்டும் தமிழ்நாட்டில் நடந்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியை அடுத்த இஞ்சிமேடு கிராமத்தை சேர்ந்த கங்காதரன், ஜெயபிரதா தம்பதியினரின் மகள் மோனி'ா (வயது 3) அப்பகுதியிலுள்ள சித்தார்த்தா மெட்ரிக்குலே'ன் மேல்நிலைப் பள்ளியில் எல்.கே.ஜி படித்து வந்தார்.

மோனிஷா தினசரி பள்ளி வானில் பள்ளிக்கு சென்று வந்தார். நேற்று பள்ளியிலிருந்து வானில் வீடு திரும்பிய மோனிஷா மாலை, 5:30 மணி அளவில் இஞ்சிமேடு கூட்டு ரோட்டில் இறங் கினார்.

வானை கடந்து மோனிஷா வீட்டுக்கு செல்ல முயன்ற போது ஓட்டுநர் வேகமாக வானை எடுத்ததில் மோனிஷா மீது மோதி சம்பவ இடத்தில் பரிதாபமாக இறந்தார்.

இந்த சம்பவம் வந்தவாசி ஊரில் மிகுந்த பதற்றத்தை ஏற்படுத்தியது. ஏற்கனவே இதுபோன்ற சம்பங்களில் பள்ளி சிறுமிகள் அண்மைக்காலமாக உயிரிழந்து வருவது தமிழகத்தில் அதிகரித்து வருகிறது.

# பிரணாப் முகர்ஜியை இனி சிறீ, சிறீமதி என அழைக்கலாம்

இந்தியாவில் ஜனாதிபதியை அழைக்கும் முறையில் பிரித்தானிய கால மரபுகளை கைவிடுவதற்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி முடிவு செய்துள்ளார்.

அதன் படி ஜனாதிபதி மற்றும் ஆளுனர் உள்ளிட்ட உயர் பதவி வகிப்போரை அழைக்கும் போது மேதகு எனும் வார்த்தை இனி உபயோகிக்கப்படாது.

எனினும் இந்த மேதகு வார்த்தை சர்வதேச சம்பிரதாய வார்த்தையாக தொடர்ந்து இருப்பதால், வெளிநாட்டு தலைவர்களுடனான சந்திப்பின் போது மட்டும் அதை பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

அதேபோன்று ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் இந்தியில் மகாமின் எனும் வார்த்தைக்கு பதிலாக ராஷ்டிரபதி மகோதாய் அல்லது ராஷ்டிரபதி ஜி எனும் வார்த்தை பயன்படுத்த முடிவாகியுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் உள்ள அரச குறிப்புக்களில் இனி இந்த வார்த்தை பயன்படுத்தப் படும். மேலும் ஜனாதிபதியை மாண்புமிகு, அல்லது சிறீ, சிறீமதி என்றோ இனி அழைக் கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் முடிவுகள், மேல்நடவடிக்கைக்காக மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியத்தையும், பொலிஸாருக்கு ஏற்படும் சுமையையும் குறைப்பதற்காக, தான் பங்கேற்கும் நிகழ்ச்சிகளை கூடுமானவரை ஜனாதிபதி மாளிகையிலேயே நடத்துமாறும் ஜனாதிபதி உத்தர விட்டுள்ளார்.

# சோனியாவின் வார்த்தைக்கு மதிப்பில்லை: ஹரியானாவில் மேலும் ஒரு பெண்கற்பழிப்பு

ஹரியானா மாநிலத்தில் இந்த ஒரு மாதத்தில் மட்டும் 14 கற்பழிப்பு சம்பவங்கள் அரங்கேறியுள்ளது.

ஹரியானாவில் தொடர்படியாக நடந்து வரும் கற்பழிப்பு சம்பங்களை அடுத்து அம்மாநிலத்திற்கு சென்ற, காங்கிரஸ் தலைவர் சோனியா பாதிக்கப்பட்ட பெண்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறினார்.

மேலும் ஹரியானாவில் காங்கிரஸ் தலைமையிலான முதல்வர் பூபிந்தர் சிங் ஆட்சி செய்வதால், இனி கற்பழிப்பு குற்றங்களில்



ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுத்தார்.


இந்நிலையில் இன்று தனியாக சென்ற இளம் பெண்ணொருவரை இரண்டு வாலிபர்கள் கடத்திக் கொண்டுபோய் கற்பழித்துள்ளனர். இவர்களை கைது செய்த பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

காங்கிரஸ் தலைவி எச்சரிக்கை விடுத்தும் அம்மாநில இளைஞர்கள் எதுக்கும் பயப்படாமல் இந்த காரியத்தில் ஈடுபடுகின்றனர்.

# இந்திய செய்திகள்

## கன்னட நடிகை மரணத்தின் மர்மம்: கணவரிடம் தீவிர விசாரணை

கன்னட மொழி நடிகை ஹேமாஸ்ரீ மரணமடைந்த தையடுத்து அவரது மரணத்தில் சந்தேகம் உள்ளது என குடும்பத்தினர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.



கர்நாடக மாநிலத்தின் வெளியாகும் கன்னட திரைப்பட மற்றும் டிவி நடிகையுமான ஹேமாஸ்ரீ (வயது 38) க்கும் தொழிலதிபர் சுரேந்திரபாபுவுக்கும் 2011 யூனில் திருமணம் நடந்தது.

இருவரும் பெங்களூருவில் வசித்து வந்தனர். திருமணத்துக்கு பின்னர், ஏற்கனவே சுரேந்திரபாபு திருமணமானவர் என்பதை ஹேமாஸ்ரீ அறிந்தார்.

இதனால் இருவருக்குமிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது. கணவர், மாமியார் மீது பொலிஸில் புகார் செய்திருந்தார் ஹேமாஸ்ரீ.

பின்னர் சிலகாலம் கழித்து இருவரும் சமாதானமடைந்து சேர்ந்து வாழ்ந்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஆந்திர மாநிலம், அனந்தபூரில் நடந்த உறவினர் குடும்ப நிகழ்ச்சிக்கு செல்ல வேண்டுமென கூறி ஹேமாஸ்ரீயை சுரேந்திரபாபு அழைத்துச் சென்றார்.

அப்போது வழியிலேயே ஹேமாஸ்ரீக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதாக கூறி பெங்களூரு திரும்பிய சுரேந்திரபாபு, அவரை பெங்களூரு மருத்துவமனையில் நேற்று முன் தினம் இரவு சிகிச்சைக்காக சேர்த்தார்.

ஆனால் ஹேமாஸ்ரீயை பரிசோதித்த டொக்டர்கள், மருத்துவமனைக்கு வருவதற்கு முன்பே அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இந்த தகவலறிந்து வந்த அவரது தாய், ஹேமாஸ்ரீயின் சாவில் சுரேந்திர பாபு மீது சந்தேகம் இருப்பதாக பொலிஸில் புகார் செய்தார்.

பிரேத பரிசோதனை அறிக்கை வெளியானதில் ஹேமாஸ்ரீயின் தலை; மூக்கு, முகத்தில் அடிபட்டுள்ளது என்றும் ஒன்றுக்கும் மேற்பட்டோர் தாக்கியிருக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் ஹேமாஸ்ரீ அணிந்திருந்த ஆடையில் ஒரு வகையான திராவக கரையும் படிந்திருந்தது.

இந்த ஆடை ஆய்வுக்காக பரிசோதனை மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை வருவதற்கு இரண்டு நாட்களாகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.ஸ்ரீ

இதனால் கணவர் சுரேந்திர பாபுவிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



ஊட்டியில் பெய்த மழையால், தாவரவியல் பூங்காவில் பிகோனியா செம்பிளோரன்ஸ் மலர்கள் பொலிவுடன் பூத்துள்ளன.

## இந்தியாவின் பிரதான சுற்றுலாத்தளத்தில் வெடிகுண்டு வெடித்தது : தீவிரவாதிகள் சதியா?

இந்தியாவின் பிரதான சுற்றுலாஸ்தலமான கேரளாவின் மூணாறு அருகே குப்பைத் தொட்டியில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் அப்பகுதி சுற்றுலாப் பயணிகள் அதிர்ச்சியில் ஆழ்ந்து ள்ளனர்.

மூணாறு மில்லும்படி பகுதியில் குப்பைத் தொட்டியில் கிடந்த வெடிகுண்டு பலத்த சத்தத்துடன் வெடித்ததில் குப்பைத் தொட்டி சிதறியதுடன் அருகில் உள்ள ஒரு ஹோட்டல், இரண்டு வீடுகளில் சிறிய சேதம் ஏற்பட்டது.

அதிக தூரத்திற்கு சப்தம் கேட்டதால் சம்பவ இடத்தில் மக்கள் குவிந்தனர்.

இது குறித்து காவலதிகாரி குரியன் ஆய்வு நடத்தினார். மேலும் வெடிகுண்டு நிபுணர்கள் நேற்று சம்பவ இடத்தில் சோதனை நடத்தியதுடன் வெடித்த பொருட்களை ஆய்வுக்காக கொண்டு சென்றனர்.

கேரளாவில், தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் உள்ள நிலையில் குப்பைத் தொட்டியில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டதா என பொலிஸார் விசாரிக்கின்றனர்

# கலட்டி நியூ ஸ்ராரின் ருவென்ரி–20 காலிறுதியில் சென்றலைட்ஸ் வெற்றி

**வலிகாமம்**

யாழ்ப்பாணம் கலட்டி நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கு இடையே நடத்தும் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 66 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லாரி மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்டஸ் விளையாட்டுகழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் இருபது ஓவர்கள் நிறைவில் 9 . விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களை பெற்றது.

இதில் ஜேம்ஸ் ஜான்சன் 49, வது சனன் 28, எட்வின் எடின் 29, செல்ரன் 19, மயூரன் 12, ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 12 ஓட்டங்களும் பெறப்பட்டன.

வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சோந்த நிரோஜன் பிரியலக்ஷன் திலீபன் தலா 4 ஓவர்கள் பந்து வீசி முறையே 17,32,38 ஓட்டங்களைக் கொடுத்து தலா இரண்டு விக்கெட்டுக்களையும்

ஸ்ரீகுகன் ஜெயசுதன் முறையே 25,27 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ட்ஸ் அணி 17.2 ஓவரில் அனைத்த விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

திலிபன் 31, ஸ்ரீகுகன் 26, குகன் 19, ஜனார்த்தனன் 18 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 7 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வியாசன் 3.2 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வதுசனன் 3 ஓவர்கள் பந்து வீசி 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும்

மயூரன் 4 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்குளக்கு 02 விக்கெட்டுக்களையும் பிரசாத் 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் ஜான்சன் தெரிவு செய்யப்பட்டார்.

# சிறந்த உதைபந்தாட்ட அணியை தெரிதல் துரையப்பா விளையாட்டரங்கில் நாளை

**வலிகாமம்**

விளையாட்டு அமைச்சின் எற்பாட்டில் மாவட்ட மட்டத்தில் சிறந்த உதைபந்தாட்ட அணிகளை தெரிவு செய்வதற்ககாக விளையாட்டு அமைச்சினால் மேற்க்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட மட்டப் போட்டிகள் நாளை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடைபெற்று முடிந்த போட்டிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அணிகளின் சிறந்த வீரர்களைக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட 21 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட அணிகள் இந்தப் போட்டியில் மோதவுள்ளன.

இந்தப் போட்டியில் முதல் சுற்றில் காலை 8.30 மணிமுதல் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு.


நெடுந்தீவு பிரதேச செயலக அணி எதிர் கோப்பாய் பிரதேச செயலக அணி,

சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் ஊர்காவற்துறை பிரதேச செயலக அணி,

வேலணை பிரதேச செயலக அணி எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி,

உடுவில் பிரதேச செயலக அணி எதிர் காரைநகர் பிரதேச செயலக அணி, சாவகச்சேரி பிரதேச செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செய லக அணி, யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டி பிரதேச செயலக அணி, நல்லூர் பிரதேச செயலக அணி எதிர் பருத்தித்துறை பிரதேச செயலக அணி, இரண்டாம் சுற்றிலிருந்து மருதங்கேணி பிரதேச செயலக அணி மோதவுள்ளன.

# நெருக்கடியில் டோனி, பிளட்சர்



2011 உலக கிண்ண தொடருக்கு பின் இந்திய கிரிக்கெட் அணி முக்கியமான பல தொடர்களில் படுதோல்விகளை சந்தித்து வருவதால், அணித் தலைவர் டோனி மற்றும் பயிற்சியாளர் பிளட்சருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

டெஸ்டில் நம்பர் 1 அந்தஸ்தை இழந்த நிலையில் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் நடந்த 8 டெஸ்ட் போட்டிகளில் உதை வாங்கியது.

அவுஸ்திரேலியாவில் நடந்த 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியில் இறுதி போட்டிக்கு தகுதிபெற முடியாமல் போனது. மேலும் வங்கதேசத்தில் நடந்த ஆசிய கிண்ண போட்டியிலும் இறுதி போட்டிக்கு முன்னேற முடியாமல் வெளியே தள்ளப்பட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக தற்போது நடந்து முடிந்த 20- 20 உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் முக்கியமான ஆட்டத்தில் தென்னாபிரிக்காவிடம் கோட்டை விட்டது.

அணித்தலைவர் டோனியின் செயல்பாடுகள் விமர்சிக்கப்பட்டாலும் வீரர்கள் தெரிவிலும் பெரும் குழப்பங்கள் நடந்து வருவது ஏன்? என்று தெரியவில்லை. மற்ற நாட்டு வாரியங்கள் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுத்து அணியை முன்னேறிச்செல்ல தேவையான நடவடிக்கைகள் எடுக்கின்றன.

மேலும் பிளட்சரின் பதவி காலம் முடிய இன்னும் ஒரு சில மாதங்கள் தான் உள்ளது. அவருடைய செயல்பாடுகள் இப்படியே சென்றால் பதவிக்காலம் நீட்டிக்கப்படுவது சந்தேகம் தான்.

கிறிஸ்டன் பயிற்சியாளராக இருந்த போது இந்திய அணி தொடர்ச்சியாக வெற்றிகளை குவித்தது. அவர் தனக்கென்று எந்த பாணியையும் கையாளாமல் மூத்த வீரர்கள் உட்பட எல்லோரையும் அவர்களது போக்கிலேயே ஆட வைத்தார். அதை மேம்படுத்தவும் செய்தார்.

ஆனால் தற்போது பிளட்சர் தொழில்நுட்பங்களை மட்டும் அதிகம் நம்பி, அதையே பயன்படுத்துவதாக ஒரு குற்றச்சாட்டும் உள்ளது. இதை தவிர்த்து அணியின் மேம்பாட்டுக்கு எது தேவையோ, அதை செய்தால் மட்டுமே வெற்றிக்கு வழிவகுக்கும்.

இந்திய அணி அடுத்து சொந்த மண்ணில் இங்கிலாந்து, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா தொடர்களை எதிர்கொள்கிறது. இந்த தொடர்களில் இருந்தே இந்திய அணியை புதிதாக சீரமைக்க வேண்டும். இளம் வீரர்களை உருவாக்கி அணியை வலுப்படுத்தினால் மட்டுமே வெளிநாட்டு தொடர்களில் நம்பிக்கையுடன் ஆட முடியும்.

# ரொனால் டினோவுக்கு ஒரு போட்டி தடை



உதைபந்தாட்ட போட்டியின் நட்சத்திர வீரர் ரொனால்டினோவுக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிறேசில் ஏ டிவிசன் உதைபந்தாட்ட போட்டித் தொடரில் அத்லெடிகோ அணிக்காக விளையாடி வரும் நட்சத்திர வீரர் ரொனால்டினோவுக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

எதிரணி வீரரைக் காயப்படுத்தும் வகையில் அபாயகரமாக நடந்து கொண்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கிரிக்கெட் அக்கடமி தலைவராக ராவிட்



பெங்களுரில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமிக்கு(என்.சி.ஏ) தலைவராக ராவிட் நியமிக்கப்பட உள்ளார்.

என்.சி.ஏ தலைவராக இருந்த சந்தீப் படேல் இந்திய அணியின் தெரிவு குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார். இதையடுத்து என்.சி.ஏ தலைவராக முன்னாள் வீரர் ராகுல் ராவிட் நியமிக் கப்படுவார் எனத் தெரிகிறது.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) நிர்வாகி ஒருவர் கூறுகையில், சர்வதேச கிரிக்கெட்டில் 16 ஆண்டுகள் விளையாடியவர் ராவிட். தவிர இந்திய அணிக்கு அணித்தலைவராகவும் இருந்துள்ளார். இளம் வீரர்கள் இவரிடம் இருந்து நிறைய கற்றுக்கொள்ளலாம்.


இப்பதவிக்கு முன்னாள் தெரிவு குழுத் தலைவர் கிரண் மோரே பெயர் பரிசீலிக்கப்பட்டது.

ஆனால் ராவிட் பெங்களுரில் உள்ளதால், பெரும்பாலும் என்.சி.ஏ.யில் இருக்க வாய்ப்பு உள்ளது. இதனால் தான் இவரை தெரிவு செய்தோம் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தற்போது ராவிட், கிரிக்கெட் விமர்சகராக இருப்பதால் இப்பதவியை ஏற்பாரா எனத் தெரியவில்லை.

இதற்கான ஒப்பந்தத்தை டிராவிட் இன்னும் ஏற்கவில்லை. இருப்பினும் சக வீரர் கும்ளே, ராவிட்டை சம்மதிக்க வைப்பார் என்று நம்பப்படுகிறது.

# ஃபெடரருக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் மன்னிப்புக் கோரினார்



உலகின் முதல் நிலை ரென்னிஸ் வீரரான ரோஜர் ஃபெடரருக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் தற்போது மன்னிப்புக் கோரியுள்ளார்.

சீனாவின் சங்காய் நகரில் நடைபெற்று வரும் சங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் பங்கேற்றுள்ளார்.

அவர் சங்காய் நகருக்கு வருவதற்கு முன்னதாக அவரை அகடோபர் 6ஆம் திகதி கொலை செய்யப் போவதாக மர்ம நபர் ஒரு வர் வலைப்பூவில் தெரிவித்திருந்தார்.

மேலும் ஃபெடரர் தலையில்லாத நிலையில் முழங்காலில் நிற்பது போன்றும், அவருக்கு அருகில் முகமூடி அணிந்த ஒருவர் கையில் கோடாரியுடன் நிற்பதும் போன்றும் ஒரு படத்தை அந்த மர்மநபர் இணையதளத்தில் வெளியிட்டிருந்தார். இந்த சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால் ஃபெடரர் உள்ளிட்ட டென்னிஸ் வீரர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் அந்த மர்ம நபர் அதே இணையதளத்தில் தற்போது மன்னிப்புக் கோரியுள்ளார்.

மேலும் இதுவரை நான் கைது செய்யப்படவில்லை. இந்த சம்பவத்துக்காக ஃபெடரரிடம் மன்னிப்புக் கோர முயன்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 12.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது